
# தென்றல்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 04 சுகந்தம் : 11 ( தை - பங்குனி ) 2011



வித்துவான் தமிழ் ஒளி க. செபரத்தினம்

65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!



"என்னோட பிஸ்னஸ் இப்ப தான் பறக்குதில்ல"
வட்டி இல்லா 18 மாதங்கள்
1 km பெட்ரல் ரூ. 1.73
Jialing JL 90 -A
லீட்டருக்கு 75 கி.மீ
90 CC 4 ஸ்ரோக் என்ஜின்
செல்.ப் ஸ்டாட்
பொருட்களை கொண்டுசெல்ல தாங்கியொன்று
12 மாத/10,000 கி.மீற்றருக்கான உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவைகள் 2
இலவச தலைக்கவசமும் மேலங்கியும்.
நிபந்தனைகளுக்கு அமைவானது. மேற்கூறப்பட்ட எரிபொருள் செயற்பாடுகள் தீர்மானத் தரத்திற்கமைவானது
"தொலைதூரம் என்றாலும் எப்போதும் என்னோடு"
வட்டி இல்லா 18 மாதங்கள்
1 km பெட்ரல் ரூ. 1.30
Jialing JL 100-8
லீட்டருக்கு 100 கீ.மீ.
100 CC 4 ஸ்ரோக் என்ஜின்
செல்.ப் ஸ்டாட்
கருநிற அலோய் வீல்
12 மாத/10,000 கி.மீற்றருக்கான உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவைகள் 2
இலவச தலைக்கவசமும் மேலங்கியும்.
நிபந்தனைகளுக்கு அமைவானது. மேற்கூறப்பட்ட எரிபொருள் செயற்பாடுகள் தீர்மானத் தரத்திற்கமைவானது
"சுமையெல்லாம் சுகமாக..."
வட்டி இல்லா 18 மாதங்கள்
1 km பெட்ரல் ரூ. 3.61
Jialing JH 150 ZH
லீட்டருக்கு 36 கி.மீ
150CC 4 ஸ்ரோக் என்ஜின்
செல்.ப் ஸ்டாட்
ஏற்றக்கூடிய ஆகக்கூடிய சுமை 30 கி.கி.
ரிவர்ஸ் கியர்-ஹான்ட் பிரேக்
12 மாத/10,000க்கான உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவைகள் 2
நிபந்தனைகளுக்கு அமைவானது. மேற்கூறப்பட்ட எரிபொருள் செயற்பாடுகள் தீர்மானத் தரத்திற்கமைவானது
சீபென்ங் கை ட்ரக்டர்கள்
ரூ.249,000
ஆரம்ப கொடுப்பனவு ரூ.74,700
மாதாந்த கட்டணம் ரூ.7,262
நீங்கள் வாங்கும் பொருள் படத்தில் காட்டப்பட்டதை விட சிலவேலைகளில் வேறுபட்டதாக அமையலாம்
முச்சக்கர வண்டி 200CC
பாகிஸ்தான் உற்பத்தி
ரூ.359,000
ஆரம்ப கொடுப்பனவு
ரூ.71,800
மாதாந்தம்
ரூ.11,966
வட்டியில்லா 24 கொடுப்பனவு
Sazgar
அபான்ஸ் காட்சியறை
175-B, திருமலைவீதி,
(சின்னஆஸ்பத்திரி முன்)
மட்டக்களப்பு.
தரமான தேர்வுக்கு....
தொ.பே:065-2228001
AD/0020

# தென்றல்
# THENDRAL



34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு

தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542

Email:- kirupabatticaloa@yahoo.com



**ஆசிரியர்**

க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**

திருமதி.சிறிதேவி சங்கர்

திரு.கே.வாமதேவன்

திருமதி.கவிதா.கிருபாகரன்

திரு.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**

இரா. நாகலிங்கம்

(அன்புமணி)

**ஓவியம்**

சி.டானியல்

**கணணி வடிவமைப்பு**

அ.ஜெயலக்ஸ்மி



**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)**


## தை பிறந்தால் வழி பிறக்கும்

**"தை பிறந்தால் வழி பிறக்கும்"** எனும் பழமொழிக்கமைய எம்மிடையே பல்வேறு மாற்றங் களை ஏற்படுத்திய 2010 ஆம் ஆண்டு விடை பெறுகிறது. பல்வேறு மாற்றங்களுடன் 2011 ஆம் ஆண்டு பிறக்கும் இவ்வேளையில் மக்கள் வாழ்வின் உயிர்நாடிகளான- பேனா முனைப் போராளிகளான எழுத்தாளர்கள் வாழ்விலும் இருள் அகன்று ஒளி பிறக்க வேண்டுமென **"தென்றல்"** மனதார எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கிறது.

இந்நிலையில் 2011 ஆம் ஆண்டை வரவேற்கும் ஏற்பாடாக **"தமிழ் எழுத்தாளர் விழா"** ஒன்றை கொழும்பு மாநகரில் தை 6,7,8,9 ஆம் திகதிகளில் மிகவும் கோலா கலமான முறையில் விழா ஏற்பாட் டுக் குழுவின கலமான முறையில் விழா ஏற்பாட்டுக் குழுவினர் ஏற்பாடு செய்து நடத்துகின்றனர்.

இவ்விழா எவ்வித தங்கு தடையுமின்றி நடந்தேற **"தென்றல்"** தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அத்தோடு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து.

நொந்து வாழும் எழுத்தாளர்க ளுக்கு மாநிலம் - உதவி வழங்க மத்திய அரசாங்கம் மற்றும் மாகாணசபைகள் உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்ற தாழ்மையான கோரிக்கையையும் **"தென்றல்"** விடுக்கிறது.

பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் இலங்கை மணித்திருநாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து சென்றாலும், எமது தாய்மொழியை சென்ற இடத்திலும் பேணி வளர்க்கின்ற எம்மவர்களை இவ்வேளையில் எண்ணிப்பார்ப்பது சாலப்பொருத் தமானதாக அமையுமல்லவா?

இந்தவகையில் வித்துவான் தமிழ் ஒளி. க.செபரத்தினம், பேராசிரியர் அமுது, இலக்கிய கலாநிதி. செல்வராசகோபால், பாபு, லெ.முருகபூபதி போன்றோர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள்.

எனவே பிறக்கும் 2011 ஆம் ஆண்டு எழுத்தாளர் வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் வழங்கும் ஆண்டாகப் பிறக்கட்டும்!

**என்றென்றும் அன்புடன்**

**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$10 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$ 50 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

# உடனிலை மெய்யும், உடம்படுமெய்யும்.

- கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம்
களுதாவளை -

உலக நியதிப்படி அழகாய் இருப்பது **"இலட்சணம்"** எனப்படும். எது எவ்வாறு இருக்கவேண்டும் என்று கூறுவது **"இலக்கணம்"** ஆகும். இலக்கணம் இல்லாவிடில், இலட்சணம், அவலட்சணம் என்பதைத் தீர்மானிக்க முடியாது. செம்மொழியாம் தமிழ்மொழி தனது தனித்துவத்தைப் பேணிப்பாதுகாத்து சீரிளமைத்திறத்தோடும், செயற்றிறனோடும் விளங்குவதற்கு தமிழ் இலக்கண நூல்கள் காப்பரண்களாக விளங்குகின்றன. அகத்தியம், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பி அகப்பொருள், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், குணவீர பண்டிதம், தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், இலக்கணச் சுருக்கம் முதலான இலக்கண நூல்கள் பலவற்றை தமிழ்மொழி பெற்றுள்ளது. இவற்றுள் தொல்காப்பியம், நன்னூல் என்பவை பெருவழக்காக கொள்ளப்படுகின்றன. தொல்காப்பியம் விரிவானது, நன்னூல் சுருக்கமானது. கி.பி 12ம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூல் இக்கால தமிழ்மொழியின் இலக்கண வரம்பாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பரீட்சைகளிலும் அந் நூலின் விதிகளுக்கமைந்த வினாக்கள் கேட்கப்படுகின்றன. இதனை ஆதார நூலாகக்கொண்டு

உடனிலை மெய், உடம்படுமெய் என்பவை பற்றி சுருக்கமாக ஆராய் வோம்.

தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்து, இறுதியில் வரும் எழுத்து, வினா எழுத்து, சுட்டெழுத்து, சார்பெழுத்து என்பன பற்றி நன்னூலார் கூறியுள்ள வற்றை ஏற்றுக்கொள்கின் றோம். உடனிலை மெய், உடம்படு மெய் பற்றியும் நன்னூலார் சூத்திரம் யாத்துள் ளார். சொற்களில் மெய் எழுத்துக்கள் வரும்போது எவ்வாறு வருதல் வேண் டும் என்பதை மெய்ம்மயக்கம் என்ற சூத்திரம் மூலம் (நன் - 77) நன்னூலார் விளக்கு கின்றார். க்,ச்,த்,ப் ஆகிய நான்கும் உடனிலை மெய்ம்மயக்க மாகவே வரும் என்பது தமிழ் இலக்கண மரபு. அவை வேற்றுநிலை (பிறநிலை) மெய்ம்மயக்க மாக வருவது தமிழ் ஒலி மரபுக்கும் இலக்கண விதிகளுக்கும் முரணாகும். உடனிலை மெய்ம்மயக்கம் என்பது ஒரு மெய்யெழுத்திற்குப் பக்கத் தில் அதே மெய் எழுத்து (மெய்யெழுத் தாக அல்லது உயிர்மெய் எழுத்தாக) வருவதைக் குறிக்கும்.

உதாரணமாக **"அக்கா"** என்ற சொல்லில் **"க்"** என்ற வல்லினமெய் எழுத்து வந்துள்ளது. அதற்குப் பக்கத்தில் (க்+ஆ=கா) **"கா"** என்ற எழுத்து வந்துள் ளது. எனவே **"க்"** என்ற எழுத்தே **"ஆ"** என்ற எழுத்துடன் சேர்ந்து உயிர் மெய்யாக வந்துள்ளது. அக்கம், பக்கம், சக்கை என்பவற்றிலும் அவ்வாறே அமைந்துள்ளதைக் காண்க. அச்சம், பச்சை, பூச்சி, மச்சம் என்பவற்றில் **"ச்"** என்ற மெய்யெழுத்திற்குப் பக்கத்தில் **"ச்"** என்ற மெய்யெழுத்து அமைந்திருப்ப தைக் காணலாம். அத்தி, பத்து, முத்து, சத்து என்பவற்றில் **"த்"** என்ற எழுத் திற்குப் பக்கத்தில் **"த்"** என்ற எழுத்து அமைந்தி ருப்பதைப் பார்க்கலாம். அப்பா, உப்பளம், ஒப்பாரி, கப்பம், என்பவற்றில் **"ப்"** என்ற மெய்எழுத்திற்குப் பக்கத்தில் **"ப்"** என்ற எழுத்துவந்துள் ளதை அவதானிக்கலாம். க்,ச்,த்,ப் என்ற மெய் எழுத்துக்களிற்குப் பக்கத்தில் வேறு மெய்யெழுத்துக்கள் வருவது தமிழ் மொழி மரபும் அன்று. இலக்கணமும் அன்று.

முட்டை, பால் என்பவை சத்துள்ள உணவு என்று கூறுகின் றோம். நோய்வாய்ப்பட்டவருக்கு சத் துள்ள உணவு, மருந்து, மாத்திரை என்பவற்றைக் கொடுக்கின்றோம். அவர் கள் அதை சாப்பிட்டு சமிபாடடைந் தால் அவர்களுக்கு சத்து ஊறி சத்தி கிடைக்கின் றது. சில வேளைகளில் சத்துள்ள இவற்றை சாப்பிட்டு சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து விடுவதுமுண்டு. இதனை சத்தி எடுத்தல் என்று கூறுவர். வல்லமை தருகின்ற வீரமுள்ள கொற றவை வழிபாட்டை **"சத்தி வழிபாடு"** என்று கூறுவதே இலக்க ணம். பலர் **"சக்தி"** என்று எழுதியும் பேசியும் வருகின்றனர்.

சத்தி என்பது வாந்தி எடுப்பதைக் குறிப்பதால் வலிமை என்பதை **"சக்தி"** என்று வடமொழி மரபுக் கேற்ப எழுத முற்பட்டுள்ளனர். இது இலக்கணத்திற்கு ஒவ்வாது. **"முத்தி நெறி அறியாது மூர்க்கரொடு முயல் வேனை பத்தி நெறி அறிவித்து...."** என்று பாடியிருப்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். பரீட்சைகளில் சக்தி, முக்தி, பக்தி என்ற இச்சொற்களின் சரியான தமிழ் இலக்கணவடிவம் பற்றிய வினாவுக்கு சத்தி, முத்தி, பத்தி என்பனவே சரியான விடையாகும்.

தமிழ் சொற்கள் ஒன்றோடொன்று சேர்வதை **"புணர்ச்சி"** என்பர். தமிழ் இலக்கணத்தில் புணர்ச்சி விதிகள் முக்கியமானவை. நிலைமொழி, வருமொழி என்பவற்றின் தன்மைக் கேற்ப புணர்ச்சிகள் வேறுபடும். ஒரு உயிரெழுத்திற்குப் பக்கத்தில் இன்னோர் உயிரெழுத்து வருவது தமிழ் மரபன்று. நிலைமொழி இறுதியில் உயிர் எழுத்தும் வருமொழி முதலில் உயிர் எழுத்தும் வரும் போது அவற்றைச் சேர்த்தெழுத வேண்டுமானால் அவற்றிற்கிடையே மெய் எழுத்தொன்றைக் கொண்டு வந்து சேர்த்து எழுதுதல் வேண்டுமென்பது இலக்கணவிதி. இந்த மெய்யெழுத்தை **"உடம்படுமெய்"** என்றனர்.

**"இ.ஈ.ஐ வழி யவ்வு மேனை**
**உயிர்வழி வவ்வு மேமுனிவ்**
**விருமையும்**
**உயிர்வரினுடம்படு மெய்யென்றாகும்."**
(நன்-162)

இச்சூத்திரம் நிலைமொழி இறுதியில் இ,ஈ,ஐ ஆகிய மூன்று உயிர்களில் ஒன்று வரும்போது வருமொழி முதலில் ஏதாவது ஒரு உயிரெழுத்து வந்தால் யகரம் (ய்) உடம்படுமெய்யாக வரும். நிலைமொழி ஈற்றில் அ,ஆ,உ, ஊ,ஒ,ஓ,ஔ ஆகிய ஏழு உயிரெழுத்துக்களில் ஒன்று வரும்போது வருமொழி முதலில் ஏதாவதோர் உயிரெழுத்து வந்தால் வகரம் (வ்) உடம்படுமெய்யாக வரும். நிலைமொழி ஈற்றில் **"ஏ"** என்ற எழுத்தும் வருமொழி முதலில் உயிர் எழுத்தும் வந்தால் ய்,வ் என்பன வரலாம் என்று பொருள் கூறுகிறது. உன்னிப்பாக கவனித்தால் ய்,வ் ஆகிய இரண்டு எழுத்துகளே உடம்படு மெய்யாகும் தன்மையன என்பது தெளிவாகும். வருமொழியின் முதலில் உள்ள உயிர் ஏறுவதற்குரிய மெய்யாக (உடம்பு) வரும் எழுத்தை உடம்பு+அடு+மெய் என்றனர். உயிரையும் உயிரையும் உடன் படுத்துவதற்காக வருகின்ற மெய் என்பதால் **"உடன்படுமெய்"** என்றும் சிலர் கூறுவர்.

மேற்கூறிய இலக்கண விதிக்கு அமைவாக பின்வரும் உதாரணங்களைக் காண்போம்.

கிளி+அழகு=கிளி+ய்+அழகு=கிளியழகு.
ஈ+எழுந்தது=ஈ+ய்+எழுந்தது=ஈயெழுந்தது.
வைகை+ஆறு=வைகை+ய்+ஆறு=வைகையாறு.

பல+அணி = பல+வ்+அணி = பலவணி.

பலா+இலை = பலா+வ்+இலை = பலாவிலை.

உடு+அழகு = உடு+வ்+அழகு = உடுவழகு.

பூ+இதழ் = பூ+வ்+இதழ் = பூவிதழ்.

நொ+அழகு = நொ+வ்+அழகு = நொவழகு.

கோ+இல் = கோ+வ்+இல் = கோவில்.

தே+இலை = தே+ய்+இலை = தேயிலை.

சே+உழுதது = 1. சே+ய்+உழுதது = சேயுழுதது.

(சே:- காளை. எருது)

2. சே+வ்+உழுதது = சேவுழுதது.

(சே:காளை. எருது)

இவை இவ்வாறிருக்க **"கோயில்"** என்று பலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். இலக்கண முறைப்படி **"கோவில்"** என்பதே சட்டரீதியானது. **"கோயில்"** என்பது **"இலக்கணப் போலி"** என்று நன்னூலில் 267ம் சூத்திரத்தின் உரை கூறியுள்ளது. சுக(ம்) + ஈனம் = சுகவீனம் என்பதுவே சரியான இலக்கணம். நிலைமொழியின் ஈற்றில் **"அ"** என்ற உயிரும் வருமொழி முதலில் **"ஈ"** என்ற உயிரும் வந்தபடியால் **"வ்"** உடம்படு மெய்யாக வரவேண்டும். வருமொழியி லுள்ள **"ஈ"** என்ற எழுத்திற் கேற்ப **"ய்"** என்ற மெய் யெழுத்தை சேர்ப்பது தவறு.

பொருத்தமான வகையில் உடனிலைமெய்ம்மயக்கத்தையும் உடம்படுமெய்யையும் பயன்படுத்தி முத்தி, சத்தி, பத்தி, கோவில், சுகவீனம் என்ற சொற்களை கையாண்டு செம் மொழியாம் தமிழ்மொழியை பேணிக் காக்கும் பணியில் பங்காளராவோம்.

# அஞ்சலி !



**13.12.2010 அன்று மட்டக்களப்பில் காலமான மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் திமிலை மகாலிங்கத்துக்கு "தென்றல்" இன் அஞ்சலி!**

**அன்னை மடியில் – 29.04.1938**

**மண்ணின் மடியில் – 13.12.2010**

எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

(ஆ-ர்)

# தென்றலின் தேடல்


-க.கிருபாகரன்-

## வித்துவான், தமிழ்ஒளி, கனகரத்தினம் செபரத்தினம்

வித்துவான். தமிழ்ஒளி கனகரத்தினம் செபரத்தினம் பழந்தமிழர் பதிகளில் ஒன்றாகிய தம்பிலுவில் கிராமத்தில் 24.09.1930 இல் பிறந்தார். இவர் கல்வி கற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராகி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்று அதிபரானார்.

இக் காலப்பகுதியில் இவர் பாடசாலை முகாமைத்துவ விடயங்களிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். இவரது மாணாக்கர்களில் பலர் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் இன்னும் பல்வேறு பதவிகளில் தம்மை நிலை நிறுத்தியுள்ளமை இதற்குச் சான்றாக அமைகிறது.

தனது இல்லற வாழ்க்கைத் துணையை நீர்வளமும், நிலவளமும் நிறைந்த திருப்பழுகாமம் கிராமத்தில் தேர்ந்தெடுத்தார். இவருக்கு - இவரது கல்வி, கலை, இலக்கியப்பணிக்கு உரம் சேர்க்க வாழ்க்கைத் துணையான நேசம்மா செபரத்தினம் இருந்ததை- இருப்பதை எண்ணிப்பார்க்கிறேன்.



இவ்வாறாக கடந்த போர் அனர்த்த காலத்தில் திருப்பழுகாமம் ஊர் மக்களின் **"ஊர்க்காவலன்"** ஆக பணிபுரிந் ததையும் கண்ணாரக் கண்டேன்.

தனது சொந்த விடயங்களுக்காக நாட்டை விட்டு இடம்பெயர்ந்து கனடா நாட்டுக்கு புலம் பெயர்ந்து சென் றார். அங்கும் எமது கலை, இலக்கியப் பண்பாட்டுக்காக தன்னை அர்ப்பணித்தார். இதற்கு கனடாவில் வெளிவரும் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளி வந்த தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் சான்று பகருகின்றன.

இந்நிலையிலேயே அண்மையில் தான் நேசிக்கும் திருப்பழுகாமம்

**இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "தென்றலின் தேடல்" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

கிராமத்துக்கு விஜயம் செய்த வித்துவானையும், அவரது பாரியாரையும் திருப்பழுகாமம் கிராமமக்கள் கிராம மத்திய இடத்திலிருந்து மங்கள வாத்தியம் முழங்க, திருப்பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம் வரை ஊர்வலமாக அழைத்துச்சென்று பெரு வரவேற்பளித்தனர். அங்கு பல்வேறு முக்கியஸ்தர்களின் பாராட்டுரைகளும், மாணவிகளின் நடனங்களும் இடம்பெற்றன.

**வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் எழுதி வெளியிட்ட நூல்கள்:-**

01. வாழையடி வாழை - 1962 இல்
02. விபுலானந்த அடிகளார் வாழ்வும், வளமும் - 1994இல்
03. நயனங்கள் பேசுகின்றன- (சிறுகதைத் தொகுதி) - 2000இல்
04. ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் -2002இல்
05. கிழக்கிலங்கை மண்ணின் புகழ் பூத்த மைந்தர்கள் - பகுதி - II ( 2003 இல் தொகுப்பு நூல்.
06. உள்ளக் கமலம் (கட்டுரைத் தொகுதி)- 2010இல்

**பெற்ற பரிசில்கள்**

01. 1993இல் சாகித்திய விழா-தமிழ்ஒளி
02. 2004இல் கிழக்குப்பல்கலைக் கழகம் - இலக்கிய முதுமாணி



உள்ளக்கமலம் நூல் வெளியீட்டுக்காக வித்துவான் தமிழ் ஒளி செபரத்தினம் உட்பட அதிதிகள் வரவேற்கப்படுகின்றனர்.

03. 1998இல் கனடா சிறுகதைப்போட்டி - முதலாம் இடம்
04. 1999இல் கனடா சிறுகதைப்போட்டி - நான்காம் இடம்
05. 1999 இல் கனடா - செந்தாமரை சிறுகதை - பரிசில்
06. ஈழத்துத் தமிழ் சான்றோர்கள் - புதினம் லண்டன், 50,000/= பணப்பரிசு.
07. கனடா எழுத்தாளர் மையம் -நிறை குடம் விருது
08. கனடா எழுத்தாளர் மையம் - 75ஆவது வயது வித்துவரத்தினம் விருது.
09. கனடா நாடக விழா -தங்கப்பதக்கம்

இவ்வாறாக தனது எண்பதாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் வித்து வான் தமிழ் ஒளி க. செபரத்தினத்தின் கலை, இலக்கியச் சேவை இச் சமூகத்துக்கு இன்னும் கிடைக்க வேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.




"உள்ளக்கமலம்" நூல் வெளியீட்டில் இடம்பெற்ற கலை நிகழ்வு.

## இலவச இணைப்பு

இத் தென்றலுடன் (தை - பங்குனி 2011) பாடசாலை மாணவர்களுக்கான நேரசூசி, 2011ஆம் ஆண்டுக்கான கலண்டர் என்பன பொறிக்கப்பட்ட இலவச இணைப்பு வழங்கப்படுகின்றது. எனவே தென்றல் இதழை வாங்கும் போது இலவச இணைப்பையும் கேட்டு வாங்குங்கள்.

(ஆ-ர்)

# நீயே தானா?

- ஏறாவூர் தாஹிர் -

கவித்தென்றல்

முற்றத்து மாவின் நுனிக்கிளையில்
முட்டையுருவிலொரு,
கொட்டைப் பாக்களவு, கரும்
பொட்டமைந்த நெற்றியுடன்
சிட்டுக்குருவியொன்று,!
சில, மாலைப் பொழுதுகளில் மட்டும்!
முற்றத்திலும், முன்னறைகளிலும்
மூக்கைத்துளைக்கும், நறும்
கஸ்தூரி வாசம்,!
சில, கணப்பொழுதுகளில் மட்டும்,!
பேசுமாப்போன்ற பிரமை....!
மேனிவாசம்,
வீசுமாப்போன்ற குளுமை....!
சிலநொடிகள்,
தோன்றுமாப்போன்ற இனிமை...!
மறுகணம்,
எல்லாமே வெறுமை...! தனிமை!
அதே வதனம்,! அதே நயனம்,!
அதே சாயலில்... யாரோ ஒரு பெண்,!
தெரு வீதிகளில்...,!
வரும் வாகனங்களில்...,!
பயணங்களில்...,! பணி மனைகளில்!

சிட்டுக் குருவியாக...,
கஸ்தூரி வாசமாக...,
அசரீரி வார்த்தையாக....,
அதே சாயலில்,
அழகு வனிதையாக...
அடிக்கடி
வருவதும், போவதும், மறைவதுமாய்....
நீதானா? நீயே தானா?

# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

- கலாநிதி. செ. யோகராசா -

தேர்வுத் தேவைக்காகவும், பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருப்பதனாலும் பாடசாலை மாணவர்களுக்கு **'சிறுகதை'** எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வேளையில் அம் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்-குழப்பங்கள்-சிக்கல்கள் பலவாகவுள்ளன. இவற்றைக் களைந்து, சிறுகதை எழுதக்கூடிய ஆற்றலை ஓரளவாவது வளர்க்க வேண்டியது இன்றியமையாததொன்று.

சிறுகதை எழுத முற்படும் ஆரம்பகால மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுள் தலையாயது கதைக்கும் - சிறுகதைக்குமிடையிலான வேறுபாடுகள் பற்றி அவர்கள் அறியாதிருப்பது. இன்னொரு விதமாகக் கூறின் அவர்கள் ஆரம்ப நிலையில் எழுதுகின்றவை பலவும் கதைகளாகவே காணப்படுகின்றன என்பதில் தவறில்லை. ஆகவே இது பற்றி - கதைக்கும் - சிறுகதைக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் பற்றி - முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானது.

**'சிறுகதை'** என்பது சிறிய கதை என்று பொருள் தருமாயினும் இங்கு இவ்வேளை **'சிறுகதை'** என்பது இலக்கிய வடிவம் ஒன்றினைக் குறித்து நிற்கின்றதென்பதனை முதலில் தெளிந்து கொள்ள வேண்டும். இத்தகைய சிறு கதை வடிவமும் - ஏனைய நாவல் வடிவம் போன்று தமிழிற்கு புதிய தொன்று. ஆங்கில ஆட்சியால் ஏற்பட்ட இலக்கியப் பெறுபேறு.

எமது பாரம்பரிய இலக்கிய வடிவமான கதை வடிவம் அறப்போதனை செய்வதை நோக்கமாகக் கொண்டது; அறங்களுள் ஏதாவது ஒன்றையும் அது பின்பற்றப்படுவதால் ஏற்படும் விளைவையும் எடுத்துக் காட்டுவது; குறிப்பிட்டதொரு அமைப்பில் - உதாரணமாக ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது - என்று ஆரம்பிப்பது. **'சிறுகதை'** அவலங்களால் அமுக்கப்படும் தனி மனிதனின் குரலாக ஒலிப்பது. புதிதாக எழுதப்படுவது.

இவ்வேளை, அமைப்பு ரீதியில் கதைக்கும் - சிறுகதைக்குமிடையிலான வேறுபாட்டினைப் புரிந்து கொள்ள முற்படுவோம். **'கதை'** ஒன்றினை **'சிறு கதை'** ஆக்க முற்படுவோம். 'போகாமல் வந்தேனே!

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் ஒரு பொருளும் ஈய மாட்டான். அதற்கேற்றாற்போல் அவன்

மனைவியும் உலோபி. ஒரு நாள் ஒருவன் இவர்களிடம் போய் **"இன்று மதிய உணவுக்கு வருகிறேன். நன்றாக சமைத்து வையுங்கள்"** என்று சொல்லி விட்டு போனான். இதைக் கேட்ட குடியான வன் திடுக்கிட்டான். இவனுக்கு சாப்பாடு கொடுக்காமல் விட என்ன செய்ய லாம். என்று யோசித்தான். உடனே தன் மனைவியை அழைத் தான். **"இன்று மத்தியானம் ஒருவன் சாப்பிட என்று வருவான் அப்போது நான் உனக்கு அடிப்பது போல் சுவரில் அடிப்பேன். நீ அழுவதுபோல் அழு. நாம் இருவரும் இவ்வாறு செய்தால், வருபவன் கணவன் - மனைவிக்குள்ளே ஏதோ சண்டை யாக்கும் என்று நினைத்துச் சாப்பிடாமல் திரும்பிப் போய் விடுவான்."** என்றான். மனைவியும் **"சரி"** என்றாள். மத்தியான வேளை வந்தது. சாப்பிட வருவதாக கூறிச்சென்ற வன் வந்தான். தூரத்தில் அவன் வருவதாகக் கண்ட துமே குடியானவன் தனது போலி நாடகத்தைத் துவக்கி விட்டான்.

சாப்பிட வந்தவன், கணவன் - மனைவிக்குள் ஏதோ அடிபிடியாயிருக் கும் போது எப்படி எனக்குச் சாப்பாடு கிடைக்கும் என்று எண்ணி வெளியில் திரும்பிப்போய் விட்டான்.

வந்தவன் திரும்பிப்போன துமே குடியானவன் சுவரில் அடிக்கும் வேலையை நிறுத்தி விட்டுத் தன் மனைவியைப் பார்த்துப் பேசினான். **"அடியே! எப்படி என் யோசனை சாப்பிட வந்த ஆளை திருப்பியனுப்பி விட்டேனே, பார்த்தாயா நோகாமல் அடித்தேனே"** என்றான். **"ஆம் சுவாமி! நானும் என் உடம்பில் நோகாமல் விக்கி விக்கி அழுதேனே என்றாள். அவன் மனைவி சிரித்த படியே"**

அப்பொழுது வெளி விறாந்தை யில் ஒரு குரல் கேட்டது. **"நானும் போகாமல் வந்தேனே"!** வாருங்கள் சாப்பிட என்பதே அது.

வீட்டுக்கு வந்தவர், தான் கொண்டு வந்த குடையை மறந்து போய் விட்டுவிட்டுச் சென்று விட்டார். சற்றுத் தூரம் போனவர் குடையை எடுப்பதற்காக திரும்பி வந்த போதே இவர்களது போலி நாடகம் இவருக்கு அம்பலமாகியது.

வெட்கித் தலை குனிந்த குடியானவனும், மனைவியும் வந்த வருக்கு உணவு பரிமாறினார்கள் **"நாம் மற்றவரை ஏமாற்ற நினைக்கலாகாது"**

சிறுகதை:- மேலுள்ள கதை, பின்வரும் சிறுகதையாகப் பரிணாமித் துள்ளது.

**"நீ உன் வீட்டுக்கு போய் விடு".** இவ்வளவு காலம் ஆகியும் நல்லாகச் சமைக்கத் தெரியாத உனக்கு இங்கு என்ன வேலை, காவைத் தூக்குவதற்கு எண்ணிய சற்குணன் அம்முயற்சியை கைவிட்டான். ரங்கனது வீட்டின் உள்ளிருந்து கேட்ட குரல்கள் அவ்வாறு செய்ய தூண்டின.

**"உங்களுக்கு என்ன வேலை செய்தாலும் எப்படி செய்தாலும் இப்படித் தான் சொல்வீர்கள்...சீ...நீங்களும் ஒரு மனுசனா?"**

**"கனகத்தின் சொல்லடிகள்!"**

**தொடர்ந்து - அழுகுரல்கள் கேட்டன".**

இதற்கு மேலும் சற்குணன் இவ்விடத்திலே நிற்க விரும்பவில்லை. சற்குணன் நீண்ட நாட்களின் பின் அன்று தான் அவ்வூருக்கு சோதிடர் ஒருவரை நாடி வந்திருந்தான். காலையில் வந்தவுடன் தனது, பால்ய கால நண்ப னான ரங்கனைச் சந்தித்து விட்டு மத்தியானச் சாப்பாட்டுக்கு வருவதாகக் கூறி விட்டுச் சென்றான். அப்படி வந்த வேளையிலே தான் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்தது.

**'பார்த்தாயா! சாப்பாட்டுக்கு வந்திருந்த சற்குணனை எப்படி திருப்பி அனுப்பினேன். என்பதை'** தனது மனைவியிடம் கூறியவாறு வாய்விட்டுச் சிரித்தான் ரங்கன்.

**"ஓம், ஓம்... பலமாக அடி வாங்கியது போல நானும் அழுதேன் தானே!"**

சடுதியாக எவரோ கதவைத் தட்டினர். ரங்கன் கதவைத் திறந்தான். **'நான்போக வில்லை, திரும்பி வந்து விட்டேன்'** என்று கூறியவாறு எதிரில் நின்றான் சற்குணன். மறந்து வைத்து விட்டுச் சென்ற அவனது குடை கைகளில் இருக்கிறது.

மேற்கூறப்பட்ட இரு படைப்புக் களுக்குமிடையிலான வேறுபாடுகள் பற்றி இனிக் கவனிப்போம்.

I) முதல் தரப்பட்டுள்ள படைப்பு (கதை) அறப்போதனை ஒன்றை அடிப்படை யாகக் கொண்டது. அது **"நாம் மற்றவரை ஏமாற்ற நினைக்கலாகாது"** அது முடிவில் வெளிப்படையாக இடம் பெற்றுள்ளது.

II) இரண்டாவதாகவுள்ள படைப்பில் (சிறுகதை) அறப்போதனை வெளிப்ப டையாக இடம் பெறாமல் உள்ளுறைந் துள்ளது.. இவ்விதத்தில் இப்படைப்பு, சிறுகதை ஒன்றிற்கான சிறந்த எடுத்துக் காட்டாக அமையவில்லை யாயினும் (இக்காலச் **'சிறுகதை'** களிலும் சில சமயம் அறப்போதனை இடம் பெறுவதனை மறுப்பதற்கில்லை) இங்கு அமைப்பு சார்ந்த வேறுபாட்டினை அவதானிப்பதே வேண்டப்படுவது.

III) முதற்படைப்பினை விட இரண்டா வது படைப்பிலே மொழிப்பிரயோகம் வலுவானதாகவும் , செறிவானதாகவு முள்ளது.

IV) மேலுள்ள இரண்டாவது படைப்பான சிறுகதை முதல் வரைபு (First draft) மட்டுமே இன்னொரு விதமாகக் கூறின், சிறுகதை ஒன்று சிற்பம் போன்று செதுக் கப்பட்டுக்கொண்டிருப்பது என்பதனை மனங்கொள்ள வேண்டும்.

V) சிறுகதையானது எழுத்தாளனது மனஉணர்வை வாசகனிலும் தொற்ற வைக்க வேண்டும். பற்ற வைக்க வேண்டும். மேலுள்ள இரண்டாவது படைப்பு அவ்வாறமையவில்லை. அவ் வாறமையும் வரையும் அது செதுக்கப் பட்டுக்கொண்டே இருக்க வேண்டியத வசியமாகிறது.

(தொடரும்)

# புரிந்து கொண்டோம்

-நீலா பாலன்-



இங்கிருந்து பார்த்தால்....
அங்கே
ஜன்னல் கம்பிச் சிறைக்குள்ளே
ஒரு கைதியைப் போல் .... நீ
வானத்தை வெறித்துப் பார்த்த படி யிருப்பாய்.

கண்கள் இரண்டுமே
போராட்ட வெறியைக்
கொதுப்பிக் கொண்டிருக்கும்.

முப்பத்தைந்து வயது வரை
கன்னி கழியாமல்
சீதனப் பொறிக்குள்
உன்னை முறித்து உட்கார வைத்த
இந்தச் சமூகத்தை
எரிக்கிற அக்கினி
உனக்குள் உற்பத்தியாகத்
தொடங்கி விட்டது.

எத்தனை பௌர்ணமிகளை
எத்தனை எதிர்பார்ப்புகளை
இழந்தவள் நீ....

முடிவுக்கு வந்து
முறிந்து போன
உனது கனவுகள் எத்தனை....
களத்தை எதிர்பார்த்து
நீ காத்திருந்த நாட்கள் தான் எத்தனை .....

பூவே .... உன்னை முறித்து
உனக்குள் புயலை உருவாக்கியது
யாரென்று நாமறிவோம்.

உன்னைப்போல் எத்தனை மல்லிகைகள்
எழ்மைச் சோலைக்குள் ....
இயலாமைக் குடிசைக்குள்....
இன்னும் எரிந்து கொண்டிருக்கின்றன.

புறாக்களெல்லாம்
புயலாய் உருவெடுத்து ....
சொந்தச் சிறையுடைத்து
முடிவுகாணப் புறப்பட்டு விட்டார்கள்
புறப்பட்டே விட்டார்கள்.

அது
புரிகிறது எங்களுக்கு.

# மட்டக்களப்பு - படுவான் கரையின் பழமையும், பழமைச் சுவடுகளும்.

-க.தங்கேஸ்வரி-

## முன்னுரை.

மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே அமைந்துள்ள பிரதேசம் படுவான்கரை எனவும், வாவிக்கு இப்பால் உள்ள பிரதேசம் எழுவான்கரை எனவும் கூறுவது மரபு. சூரியன் மறையும் பகுதி படுவான் எனவும் சூரியன் உதிக்கும் அதாவது எழும்பும் பகுதி எழுவான் எனவும் பொருள்படும். இது விளங்காமல் படுவான்கரை என்றால் இழுப்பமாக நினைக்கும் சிலரும் உளர். இன்று மண்முனை வடக்கு என அழைக்கப்படும். எழுவான் பிரதேசமானது போர்த்துக்கேயர் வருகையின் பின்னரே உருவாகி வளர்ச்சியடைந்த பிரதேசமாகும். படுவான்கரை என அழைக்கப்படும் பிரதேசமே பண்டைய இராச்சியமாகிய மண்முனை இராச்சியம் அமைந்த இடமும், இயக்கர், நாகர், அவர்களின் வழிவந்த வேடர், வாழ்ந்த இடமுமாகும். நம்முன்னோரான ஆதித்திராவிடரின் சுவடுகள் மூலம் முழுமையான வரலாற்றைத்தரும் இடமும் இதுவேயாகும்.

## படுவான்கரையின் அமைவிடம் கிழக்கிலங்கையில் பெறும் முக்கியத்துவம்.

மண்டூர் - எருவில் தொடக்கம் ஏறாவூர் வரை நீண்டு பரந்து காணப்படும் இப்படுவான் கரைப்பிரதேசம் என்பது தெற்கே அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளையும் வடக்கே மட்டக்களப்பு வாவியினையும், மேற்கே மலை நாட்டினையும் எல்லைகளாகக் கொண்டது. எந்தவொரு ஆய்வுக்கும் இதுவரை உட்படாத இப்பிரதேசமானது இன்றும் பழம் பெருமையுடனே உள்ளது. மட்டக்களப்பு நகருக்கு அருகிலே அமைந்துள்ள கன்னன்குடா எனும் கிராமம் கூட இன்றும் கன்னி கழியாத கிராமமாகவே உள்ளது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இலங்கையில் மிகவும் தொன்மை வாய்ந்த பிரதேசம் என்றால் அது கிழக்கிலங்கை ஆகும். மண்ணியல், தாவரவியல், தொல்லியல் ஆய்வுகள் மூலம் இவ்வுண்மை நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெறும் வரை கிழக்கு மாகாணம் முழுவதும் ஒரு அரச அதிபரின் கீழ் இருந்தது 1962ம் ஆண்டுக்குப் பின்னர் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என மூன்று மாவட்டங்க ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பண்டைய மட்டக்களப்பு என்பது இன்றைய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக் கிய பிரதேசமாகவே இருந்தது. அப்போது 1.பாணமைப்பற்று, 2.அக்கரைப்பற்று, 3.நிந்தவூர் கரைவாகுப்பற்று, 4.சம் மாந்துறைப்பற்று, 5.எருவில், போரதீவு, மண்முனைப்பற்று, 6.மண்முனை வடக்கு, 7.விந்தனைப்பற்று, 8.ஏறாவூர் பற்று, 9.வேகம்பற்று என ஒன்பது பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதிலே எருவில், போரதீவு, மண்முனைப்பற்று என்பது படுவான்கரை பிரதேசமாகும்.

பழுகாமம், போரதீவு, மண்டூர், கொக்கட்டிச்சோலை, பண்டாரியாவெளி, மண்முனை, மணல்புட்டி, கொத்தியா புலை, தாந்தாமலை, கச்சக்கொடி சுவாமி மலை, கன்னன்குடா, புளியடி மடு, ஈச்சந்தீவு, நாவற்காடு, கரவெட்டி, ஆயித்தியமலை, உன்னிச்சை, மகிழ வெட்டுவான், பங்குடாவெளி, குசலான் மலை, புல்லுமலை, கரடியனாறு போன்ற முக்கிய கிராமங்கள் இப்படுவான் கரையிலே அமைந்துள்ளன. இப்பிர தேசத்தின் பழமையை அறிய உதவும் ஆதாரங்களோ மிகமிக குறைவானது.

### 3. படுவான்கரையின் பழமையை அறிய உதவும் ஆதாரங்கள்.

(i) இப்பிரதேசத்திலே காணப்படும் இடிபாடுகள்

(ii) கல்வெட்டுக்கள், நாணயங்கள் போன்றன.

(iii) கர்ணபரம்பரைக் கதைகள், நாட்டார் பாடல்கள்.

(iv) இலக்கியங்கள், மட்டக்களப்பு மான்மியம் போன்றன.

(V) சில ஏட்டுச்சுவடிகள்.

(Vi)பாரம்பரிய நடைமுறைப் பழக்கவழக்கங்கள்.

(vii) ஆலய நடைமுறைகள் போன்றன.

மேற்குறிப்பிட்ட சில விடயங் களை ஆதாரமாகக் கொண்டுதான் இப் பிரதேசத்தின் முழுமையான வரலாற் றைக் கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயம் உள்ளது. தொல்பொருளியல் எச்சங்கள் நிறைந்து காணப்படும் இப்பிரதேசம் மேலாவிற்கோ (EXPLORATION) அகழ்வாராட்சிக்கோ (EXCAVATION) உட்படுத்தப்படாத ஒரு பிரதேசமாகும். குசலான் மலையில் உள்ள ஒரு சில கல்வெட்டுக்கள் டாக்டர் பரணவிதான வால் வாசிக்கப்பட்டுள்ளன.

### 4. படுவான் கரை பிரதேசத்தின் தொன்மை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தில் இரத்தினபுரி, பலாங்கொட பிரதேசத் தில் வாழ்ந்த ஆதித்திராவிட மக்கள்

இங்கும் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ள இப்பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக்கள், இன்றும் வாழும் வேடர்களின் வாழ்க்கை முறை என்பன தற்கால மனித வாழ்க்கையை நினைவூட்டுகின்றன. கிழக்கிலங்கையின் ஆதிக்குடிகளான வேடர்களைக் கொண்டே இப்பிரதேசத்தின் தொன்மையைக் கணிப்பிட முடியும். கிழக்கு மாகாணத்திலே விந்தன, வெல்லச, தமண, குமண, உகந்தை, மகாஓயா, பிபிலை, அறுகம்பே, தீகவாவி போன்ற இடங்களில் காணப்பட்ட வேடர் குடியிருப்புக்களும், இடுகாடுகளும், அங்கு கிடைக்கப்பெற்ற வழிபாட்டுச் சின்னங்கள், ஒரு தலை - முத்தலைச் சூலங்களும், லிங்கவழிபாடும் ஆதித் திராவிடர் வாழ்க்கையை உறுதிப்படுத்துகின்றன. இவ்வினமே இங்கும் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகும். படுவான்கரை முழுவதும் பண்டுபரவி இருந்த இனம் ஆதித்திராவிட இனம் என்பது இதனால் புலனாகின்றது.

## 5. படுவான்கரையின் பண்டைய மக்கள் இனம்.

கிழக்கு மாகாணத்திலே ஆதியில் குபேரனும் தொடர்ந்து அயோத்தி நாகர், குருகுல நாகர் ஆட்சி செய்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறும் விடயம் வரவேற்கத்தக்கது. அதனைத் தொடர்ந்து உலக நாச்சி வருகையுடன் மண்முனை இராட்சியமும், மன்னர் பரம்பரை ஒன்றும் உருவாகியது. இவ்விடயத்தை மட்டக்களப்பு மான்மியம் கூறினாலும் மகாவம்சம் போன்ற சிங்கள நூல்கள் மூலம் உறுதிசெய்ய முடிகின்றது.

## 6. நாகர்களும் படுவான்கரை பிரதேசமும்.

இயக்கர், நாகர் இப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் நாகரே கூடிய செல்வாக்குச் செலுத்தியுள்ளனர் என்பதற்கு இப்பிரதேசம் முழுவதும் இன்றும் காணப்படும் நாகவழிபாட்டு சின்னங்களும், நாகவழிபாட்டுக் கோயில்களும், இலக்கிய கதைகளும் சான்றாகின்றன. பண்டாரியாவெளி கிராமத்திலே புகழ்பெற்ற நாககோயிலும், வழிபாடும் அசைக்க முடியாத ஒன்றாக உள்ளது. கித்துள் போன்ற இடங்களில் நாக வழிபாடு புகழ்பெற்றுள்ளது. கொத்தியா புலையிலே எடுக்கப்பெற்ற நாககற்சிற்பமும் கைப்பிடிச்சுவரும் கச்சேரி நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இக் கைப்பிடிச்சுவரும், நாகசிற்பமும் முன்னைய அனுராதபுரக்கால சிற்பங்களை ஒத்ததாகவும், யட்டாளவெகர சிற்பகத்தகட்டை ஒத்ததாகவும் உள்ளன. மேற்கே செல்லசெல்ல மலைகளில் உள்ள குகைகளில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் அனைத்திலும் நாக பெயர்கள் உள்ளன. தொடர்ந்து வாழ்ந்த

வேடர்களும் நாகவழிபாட்டிலும், நாகபாம்பை வளர்ப்பதிலே ஆர்வம் காட்டுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 7. படுவான் கரையில் அமைந்த மண்முனை இராச்சியம்.

இன்று மண்முனை - மேற்கு, மண்முனை தென்மேற்கு என அழைக்கப்படும் பிரதேசத்தில் பண்டைய மண்முனை இராச்சியம் அமைந்திருந்தது. எழுவான் கரையிலும் கோயில் குளம், தாளங்குடா, ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக மண்முனை இராச்சியம் பரந்து காணப்பட்டுள்ளது. மண்முனை இராச்சியத்தை கலிங்க இளவரசி உலக நாச்சி உருவாக்கினாள் என மட்டக்களப்பு மான்மீயமும், கர்ணபரம்பரைக் கதைகளும் கூறுகின்றன. இவள் மண்முனை இராச்சியத்தை உருவாக்கினாள். கோயில் குளம் ஆலயத்தை அமைத்தாள். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலைக் கட்டினாள் என மட்டக்களப்பு மான்மீயம் கூறுகின்றது. மட்டக்களப்பு மான்மீயம் கூறும் இவ்வுலக நாச்சி வரலாற்றை மகாவம்சம் மூலம் உறுதி செய்ய முடிகின்றது. மேகவர்ணன் ஆட்சியின் போது (கி.பி 362-390) பிராமணப்பெண் ஒருத்தி சிவலிங்கத்தையும், புத்தரது தசனத்தையும், கூந்தலுக்குள் மறைத்து கொண்டு வந்ததாகவும் மேகவர்ணன் அவர்களுக்கு மட்டக்களப்பிலே காடாயிருந்த ஒரு இடத்தை கொடுத்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

மட்டக்களப்பு மான்மீயம் இவள் கலிங்கஇளவரசி எனவும் தன்னுடன் புத்தரின் தரிசனத்தையும் கையலங்கிரியிலிருந்து தம்முன்னோர் எடுத்து வந்த லிங்கம் ஒன்றையும் கொண்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. உலகநாச்சி தான் கொண்டு வந்த லிங்கத்தை கோயில் குளத்தில் பெரிய கோவில் கட்டி பிரதிட்டை செய்தாள் எனப்படுகின்றது.

## 8. உலக நாச்சியும் - கோயில் குளமும்

மேகவர்ணனால் வழங்கப்பட்ட காடாயிருந்த பிரதேசத்தை வெளியாக்கி செப்பனிட்டு இராச்சியம் அமைத்து மண்முனை என பெயரிட்டு ஆட்சி செய்த உலக நாச்சி தான் கொண்டு வந்த லிங்கத்தை கோயில் குளம் ஆலயத்தில் பிரதிட்டை செய்தாள். இதற்கு சான்றாக மண்முனை கோயில் குளத்திலே கிடைக்கப்பெற்ற படிகலிங்கமும், பெரிய கந்து விளக்கின் பகுதிகளும், ஐந்து தலை நாகத்துடன் கூடிய புத்தர் சிலையும், கல்படிகளும் அனைத்தையும் உறுதி செய்கின்றன. இக்காலம் பௌத்தமும் சைவமும் ஒன்றாக வளர்ந்த காலப்பகுதியாகும். காலவோட்டத்தில் இக் கோயில் சிதைந்துவிட்டது. பண்டைய

தாழங்குடா, கோயில்குளம் பகுதிகள் அனைத்தும் மண்முனை இராச்சியத் துடன் இணைந்திருந்தன. இதற்கு ஆதாரமாக மேலும் பல எச்சங்கள் தாழங்குடா, கோயில்குளம் பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ளன.

## 9.உலகநாச்சியும் கொக்கட்டிச் சோலை கோயிலும்

உலகநாச்சி கொக்கட்டிச் சோலைக் கோயிலைக் கட்டினாள் எனும் கதையை நோக்கினால் ஏற்கனவே இருந்த் கோயில் உலக நாச்சியினால் புதுப்பிக் கப்பட்டது எனலாம். ஆதி வழிபாடு உலகெங்கும் மரபு வழிபாடா கவே இருந்தது. இத்தகைய வழிபாடு மட்டக்களப்பு பிரதேசத்திலே உகந்தை, மண்டூர், கொக்கட்டிச்சோலை, திருக் கோவில், மாமாங்கம் போன்ற இடங்களில் காணப்பட்டன. ஆதியில் மரத்தை வழிபட்ட மக்கள் பின்னர் மரத்துடன் சேர்ந்ததாக கல் ஒன்றை வைத்து வழிபடும் முறையினை மேற்கொண் டனர். ஆதித்திராவிடரான நாகர் வழிபட்ட கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயமானது உலக நாச்சியினால் கல்லால் அமைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மான்மியம் கூறும் தகவலானது இன்னும் ஒரிசா தேசத்திலிருந்து அனேக குகக் குடும்பங் களை அழைத்து காப்பு முனைக்காட்டை செப்பனிட்டு குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாக்கி மண்முனை என நாமம் சூட்டி இராஜதானி ஆக்கினாள்.

## 10.கோயில்குளமும் - கொக்கட்டிச் சோலையும்

உலகநாச்சி கோயில்குளம் லிங்கக்கோவில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில் இரண் டையும் பெரியளவில் கட்டி - ஆட்சி செய்தாள். கோயில் குளத்திலிருந்து ஏற்கனவே கொக்கட்டிச்சோலைக்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் உலகநாச்சி காலத்திலே ஆரம்பிக்கப் பட்டது. கோயில்குளம் ஆலயம் அழிவுற்ற பின்பு இவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசாமி கோவிலிலிருந்து கொண்டு செல்லும் வழக்கமாகியது. உலகநாச்சிக் குப் பின் மண்முனை இராச்சியம் தொடர்ச்சியான ஒரு அரசபரம்பரையி னைக் கொண்டு ஆட்சி செலுத்தியதை யும் காணமுடிகிறது.

## 11.பெருங்கற்கால பிராமிக் கல் வெட்டுக்கள்.

படுவான் கரைப்பிரதேசத்தின் மேற்கே செல்லச் செல்ல பல குன்றுகளை யும், குகைகளையும் காணமுடியும். இங்கு கற்படுக்கைகளுடன் கூடிய குகைகள், கற்தூண்கள் பிராமிக்கல் வெட்டுக்கள் போன்றன உள்ளன.

பொதுவாக பிராமிக்கல்வெட்டுக்கள் கி.மு.3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.4ம் நூற்றாண்டிற்கு உரியன. இங்கு காணப்பட்ட பிராமிக்கல்வெட்டுக்களின் எழுத்துக்கள் அசோகப்பிராமிக்கு முற் பட்டன ஆகும். ஆனால் அவை அசோகப் பிராமி வருகையுடன் மறைந்து விட்டன என ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.

மண்முனைப் பிரதேசத்தின் வடக்கிலே அமைந்துள்ள குசலான்மலை என்ற பகுதியிலே கி.மு கால பிராமிக்கல் வெட்டின் சுலோகம் உள்ளன. இவை பரண விதானவால் வாசிக்கப்பட்டு பிரதி செய்யப்பட்டுள்ளன. இவை நாக, அபய, திச, உதி, காமினி, குப்த போன்றவரால் வழங்கப்பட்ட நன்கொடைகளை குறிப் பன ஆகும்.

**12.பதுளை வீதியில் சில பிராமிக் கல் வெட்டுக்கள் .**

குசலான்மலை பிராமிக்கல் வெட்டுக்கள் மட்டக்களப்பு பதுளை வீதியில் 85ம் கட்டையில் 2மைல் தூரத்தில் குசலான் கந்த எனப்படும் கற்பாறையில் கல்வெட்டுக்கள் பல குகை களில் காணப்படுகின்றன. இடிபாடுகள், அத்திவாரங்கள், தூண்களின் அடிப்பா கங்கள், தூண்கள் பொருத்தும் குழிகள் என்பன சிதறிக் காணப்படுகின்றன. இங்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால கல்வெட்டுகள் (பிராமி) காணப்படுகின் றன. இவற்றை பரணவிதான பதிவு செய்துள்ளார்.

இக்கல்வெட்டுக்கள் உபராஜ நாகனின் மகனான அபய என்பவனின் மகன் காமினி திச எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இன்னொரு கல்வெட்டிலே சகனிலய (CAHANILAYA) என்றுள் ளது. சுமார் 7 கல்வெட்டுக்களை டாக்டர் பரணவிதான பதிவு செய்துள்ளார்.

**13. கல்விட்டுப்பொத்தான பிராமிக் கல்வெட்டுக்கள்**

இது கல்லுடு பொத்தான (KALUDU POTTANA) என மருவி விட்டது.


குசலான் மலைக்கு 4 மைல் அப்பால் உள்ள கல்லுடு பொத்தான மலையிலும் கல்வெட்டுகள் காணப்பட டன. இக்கல்வெட்டில் குறிப்பிடும் அபய என்பதுடன் பருமகர், சதசை, பக்தை புணச ஆகியோருக்கு குகை வழங்கப்பட டது. என்ற வாசகங்கள் கொண்ட இரு கல்வெட்டுக்கள் இங்குள்ளன.

**14. நுவரகல்கந்த (NUVARA GALA) பிரமிக்கல்வெட்டு:-**

(பதுளை மட்டக்களப்பு பாதை யில் 67ஆம் கட்டையில் 6மைல் தென் கிழக்கிலுள்ள **"நுவரகந்த"** என்ற இவ்விடத்தில் பெருமலையில் ஏறும் வகையில் கற்கள் பதிக்கப்பெற்றுள்ளன. இங்கு காணப்படும் கல்வெட்டில் **"தேவ நம்பியதீச"** மகரஜகாமினி திசவின் மகன் மகாதிசவின் குகை சங்கத்திற்கு வழங்கப்பட்டது என்ற வாசகம் பொறிக் கப்பட்டுள்ளது.

**-தொடரும்-**

# புதிய வரவுகள்



**நூல்** :வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்

**ஆசிரியர்** : கலாபூசணம் தாழை செல்வநாயகம்

**நூலின் தன்மை** : வரலாற்று ஆய்வு

**விலை** : ரூபா. 245.00

---




**நூல்** : மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம்

**ஆசிரியர்** :சரவணமுத்து நவேந்திரன் (வெல்லபதியான்)

**துணை ஆசிரியர்** :சரவணமுத்து கணேசமூர்த்தி (சரவணன்)

**வகை** : வரலாறு

---




**நூல்** : உள்ளக்கமலம் (கட்டுரைகள்)

**ஆசிரியர்** :கனகரத்தினம் செபரத்தினம்

**வெளியீடு** :எண்பதாவது பிறந்தநாள் முத்துவிழாவுக்காக

**வகை** : வரலாறு

---




**இறுவட்டு** : பேச்சியம்மன் பாடல்கள்

**பாடல்வரிகள்** :கவிஞர் ஆரையூர் அருள்

**தயாரிப்பு** :கலைச்செல்வன் (ரவி), லண்டன்.

# உறவுகள்



- க.பரணீதரன்-

கண்ணன் வீட்டுக்கு வந்து நீண்ட நேரமாகி விட்டது. அவனையே உற்று உற்றுப் பார்க்கிறேன். ஏதோ பிரமை பிடித்தவன் போல உட்கார்ந்து இருந்தான்.

நாங்கள் பதினெட்டு வருசத்துக்குப் பிறகு போன மாதம் தான் எங்கடை தாய்நாடான ஸ்ரீலங்காவுக்கு போட்டு வந்தனாங்கள்... அங்கை போட்டு வந்த பிறகு தான் இவன் இப்படி....

கண்ணனுக்கு இருபத்தி நான்கு வயசாகிறது. ஆறுவயதில் ஒன்றுமறியாத குழந்தைப்பருவத்தில் அவன் இருந்த போது வல்வெட்டித் துறையில் இருந்து புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு வந்தம். அவுஸ்திரேலியாவுக்கு நாங்கள் வந்ததே அவனுக்காகத் தான். ஆறுவயசாக இருக்கும் போது அவன் பற்றிய பயம் எங்களுக்கு இருக்கவில்லை... ஆனால் இளந்தாரிப் பெடியனாக வளரும் போது அவனை எப்படி அந்த பிரதேசத்தில் வைத்துக் காப்பாற்றுவோம் என்ற பயமும் அங்கலாய்ப்பும், இனியும் வல்வெட்டித் துறையில் இருக்க முடியாது என்ற போர்ச்சூழல் ஏற்பட நாங்கள் குடும்பமாக இங்கை வந்தம். எங்கடை உறவுகள் எல்லாம் திக்குத் திக்காக இடம்பெயர்ந் தார்கள்.

அவுஸ்திரேலியாவிலை எங்களைப்போல வல்வெட்டித் துறையிலிருந்து இடம்பெயர்ந்த நூற்றியொன்பது குடும்பம் இருக்கினம். சில தூரத்து உறவுகளும் அவர்களில் இருக்கிறார்கள்.

நாங்கள் எல்லோரும் மாதமொரு தடவை ஒன்றாகக் கூடி உணவருந்துவோம்... கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவோம்... இப்படியாக எங்கடை வாழ்க்கை இங்கு சென்று கொண்டிருக்கிறது.

கண்ணனுக்குப் பிறகு இங்கு வந்தாப்போலை எங்களுக்கு ஒரு

பெண்ணும், ஒரு பெடியனும் பிறந்தார்கள்.

இங்கை வந்த புதிசிலை என்ரை அப்பா, அம்மா, ஊர்ச்சனம், நான் தினந்தோறும் சென்று வழிபடும் வல்வெட்டிச்சிவன் கோயில், நாங்கள் வருடா வருடம் சந்தோஷமாக கொண்டாடும் இந்திரவிழா, நானும் அவரும் காதலிச்ச வல்வெட்டிக் கடற்கரை, என்ரை தோழிகள் எல்லாத்தையும் விட்டு விட்டு இங்கை வந்து வாழ்வதை நினைக்க கஷ்ரமாகத் தான் இருந்தது... அவருக்கும் தான்... ஆனால், அவர் ஒரு அமுசடக்கி... எதையும் வெளிக்காட்டமாட்டார்.

நாட்கள் செல்லச் செல்ல அவுஸ்திரேலிய வாழ்க்கைக்குத் தகுந்தாற் போல் எங்களில் மாற்றம் ஏற்பட்டது. எங்கடை பண்பாடு, கலாசாரம், உடை இதையெல்லாம் மாற்றக்கூடாது என எம்முள் நாம் நினைத்த போதும், எம்மால் இங்கத்தைய கலாசாரத்தைப் பின்பற்றாது வாழ முடியாது என்ற உணர்வு ஏற்பட கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் நடத்தைகளும் மாற்றம் கண்டது.

ஆறு வயசிலை இங்கு வந்த தாலை கண்ணனுக்கு ஊர் பற்றி பெரியசா ஒண்டும் ஞாபகம் இல்லை. மற்றதுகள் இரண்டும் இங்கை பிறந்த தாலை அதுகளுக்கு ஸ்ரீலங்கா என்றால் **"சண்டை நடக்கிற நாடு"** என்று மட்டுமே தான் தெரியும். கண்ணன் **'சொவ்ற் வெயர் இன் சினியறிங்'** முடிச் சுட்டு இப்ப **'கொம்பனி'** ஒண்டிலை வேலை பார்க்கிறான். பெடிச்சி டாக்ரருக்கு படிக்கிறாள். கடைசிப் பெடியன் **'ஹோம் புஸ் போயஸ்' 'ஸ்கூலி'**ல் பத்தாம் வகுப்பு படிக்கிறான்.

இங்கு எல்லாமே இங்கிலீஸில் தான். ஆனால் எங்கடை தமிழ் ஆட்கள் பலபேர் இங்கே இருக்கிற தாலை அவுஸ்திரேலிய அரசாங்கத்தின்ரை அனுசரணையுடன் தமிழ் பள்ளிக்கூடம் ஒன்றை சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தி மேலதிக பாடமாக தமிழை கற்பிக்கினம். எங்கடை கலாசார நிகழ்வுகள் இடைக்கிடை நடைபெறும், **'சிட்னி'**யில் முருகன் கோவில் ஒன்றும் **'வொலோங்கொங்'**கில் விஷ்ணு கோவிலும் இருந்தது... கந்தசஷ்டி, கிருஸ்ண ஜெயந்தி, திருவிழாக் காலத்திலை அங்கை இடைக்கின போய் வாறனாங்கள். மற்றபடி வேலைக்கு போய் வாறதோட எங்கடைகாலம் கழிந்து போகுது...

ஸ்ரீலங்காவிலை போர் ஓய்ந்த நிலையிலை பிள்ளைகளை ஒருக்கா ஊருக்குக் கூட்டிப் போகலாம் என்று ஆசைப்பட்டுதான் கூட்டிப்போனனான்.. பிள்ளைகள் நல்லா மகிழ்வினம். இன சனத்தோடு கூடி என்ற நினைப்பில்

தான் கூட்டி போய் வந்தன்... ஆனால் இவன் ஊருக்குப் போய் வந்ததில் இருந்து பிரமை பிடிச்சவன் போலை இருக்கிறதை பார்க்க சகிக்கேலாமல் இருக்கு... இவன்ரை பிரச்சினை என்ன வாக இருக்கும் என்ற நினைப்போடு...

தம்பி **'வட்ஸ் த ப்ரப்ளம்?', 'வட் ஹப்பின்'** என்று அவனிடம் கேட்டேன்.

'..........' மௌனமே பதிலாக வர மீண்டும் கேட்டேன். **'என்ன பிரச்சினை'** எண்டு...

**"நோ... மம்மி 'நத்திங்"** என்றான்.

**"இல்லை... உனக்கேதோ பிரச்சினை இருக்கு... ஏன் ஊர் போய் வந்ததில் ஒரு மாதிரியாய் இருக்கிறாய், 'வட்ஸ் வுறோங்?'"**

**"மம்மி, ஐ வோன்ற் ரு கோ ரு ஸ்ரீலங்கா பக்"** என்றான்.

ஒன்றுமே விளங்கவில்லை... **"வட்"** என்றேன்.

**"நான் ஸ்ரீலங்கா போகப் போறன்" "இப்பதானே போட்டு வந்த னாங்கள் அடுத்த 'வக்கே சனுக்கு' போகலாம்"**

**"இல்லை, மம்மி நான் அங்கை போய் இருக்கப்போறன்..."**

**"என்ன"** என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டேன்.

**"யேஸ், மம்மி ஸ்ரீலங்கா போய்ட்டு வந்ததில் இருந்து என்னாலை தூங்க முடியலை..."**

ஏன், ஏதும் பெட்டையைக் கண்டு மயங்கிட்டானோ... ஊர்ப் பெட்டை யாரையும் காதலிக்கி றானோ...

என்ற நினைப்பில் **"ஏன் ராசா ஊருக்குப் போனபோது யாரையும் 'லவ்' பண்ணத் தொடங் கிட்டீரோ... அது தான் உம்முடைய பிரச்சினை யோ"** என்றேன்.

**"யூ சட் அப்..."** எனச் சடா ரென்று சொன்னான். இங்கு 'சட் அப்' என்று சொல்வது சர்வ சாதாரணம்...

**"அப்ப ஏன் ஊருக்கு..."**

**"எனக்கு அங்கத்தைய வாழ்க்கை புடிச்சிருக்கு... என்ரை அம்மம்மாவின்ரை பாசம்... மாமி யவையின்ரை அரவணைப்பு.. மச்சான், மச்சாள்மாரின் நட்பும் பாசமும்... அந்த இயற்கையான சூழல்... ஊராரின் இரத்த பாசம்... எல்லாம் என்னைச் சரியாகக் கவர்ந்திழுத்துப்போட்டுது. எவ்வ ளவு அன்பான, அரவணைப்பான விட்டுக் கொடுப்பு நிறைந்த யதார்த்த வாழ்வு அவர்களுடையது..."**

**"இங்கு விடிஞ்சா உடனே வேலைக்குப் போகணும்... இயந்தி ரம் போல உழைக்கணும்... ஒருவ ருடன் ஒருவர் மனம் விட்டுப்பேச**

**நேரம் இல்லை... இயந்திரமயப்பட்ட வாழ்க்கை.. எல்லோரிடமும் பணம் சேர்ப்பது மட்டும் தான் நோக்கமே தவிர அன்பு, பாசம், 'லவ்', இரக்கம் ஒண்டும் இல்லை. இவ்வளவு காலமா ஏதோ சிறையில் இருந்த மாதிரி உணருறன்... நான் ஸ்ரீலங்காவுக்கு திரும்பிப்போய் அங்கை தான் என்ரை உறவுகள் உடன் வாழப்போறன்... அதில் இனி எந்த மாற்றமும் இல்லை..."**


என திடமாக அவன் கூறி முடிக்க... என் கண்கள் கண்ணீரால் நிறைந்தது... மற்ற இருபிள்ளைகளும் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு **"கீ ஸ் ஸ்ருப்பிட்..."** என்றவாறு உள்ளே செல்கிறார்கள்.

கண்ணனை என் நெஞ்சத்தோடு அணைத்துக் கொண்டு **"டோன் வொறி மை சைல்ட், என்ரை மகனே கவலைப்படாதை... நீ ஆசைப்பட்ட மாதிரி ஸ்ரீலங்கா போ... எங்களை விட பாசம் காட்ட எங்கடை உறவுகள் அங்கை இருக்கு... உனக்கு அங்கையே ஒரு கல்யாணத்தையும் செய்து வைக்கணும்... அப்பா வேலையாலை வரட்டும் நல்ல முடிவா ஒன்றை எடுப்பம்"** என்று நான் சொல்ல....

அவன் முகத்தில் படர்ந்த ஆனந்தத்தைப் பார்க்க... என் வல்வெட்டித்துறை என் கண்களின் முன்னால்.....

## மாதுளையின் மகத்துவம்

உடலுக்கு ஆரோக்கியம் தரும் பழங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது மாதுளம் பழம், கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியவர்கள் என அனைவருக்கும் ஏற்ற பழமாக விளங்கும் மாதுளம் பழத்தின் சாறு சிறுநீரகத்துக்கு மிகவும் நல்லது என்று சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர்.



இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், மாதுளம் பழச்சாறு தொடர்ந்து குடித்து வந்தால் சிறு நீரக நோய் பெருமளவில் கட்டுப்படும் என்று கண்டுபிடித்துள்ளனர். மேலும் இதய நோயாளிகளுக்கும் நல்லது என்று தெரிய வந்துள்ளது.

அது மட்டுமன்றி மாதுளம்பழம், ஆன்டி ஆக்ஸிடென்ட் ஆகவும் செயற்படுகிறது என்றும் அந்த ஆய்வில் கூறப்படுகின்றது.

-கலாபூஷணம் தாழை, செல்வநாயகம் -

# குருவிகளின் கும்மாளம்

அழகம்மா முற்றத்தில்
அழகான கூடொன்று
கழுகொன்று அது கண்டு
கன நாளாய் வட்டமிடும்

அவரைக் கொடிப் பந்தல்
அதனுள்ளே அக்குடும்பம்
மின்மினிகள் அக்கூட்டில்
மின்குமிழ் போலாகிவிடும்


மூன்று தலை முறையும்
முற்றத்தில் கொண்டாட்டம்
முழு நிலாக்காலத்தில்
முற்றத்தில் இரை பொறுக்கும்

பாம்பொன்றும் பல நாளாய்ப்
பந்தலிலே படுத்திருக்கும்
பாட்டிக்கு கண் புகைச்சல்
பழுதையென் றெண்ணிவிட்டாள்

குருவிகளும் குஞ்சுகளும்
குதூகலமாய் வாழ்நாளில்
குண்டு மழை வெடிச்சத்தம்
கண்டு சனம் ஓடியது.

குருவிகள் ஓடவில்லை
தலை நடுங்கிப் போகவில்லை
கரும்பாம்பும் கழுகும்
கருகின சுடுபட்டு

நாலாறாண்டுகளில்
நாட்டில் சமாதானம்
வீதிகளில், வீடுகளில்
கொண்டாட்டம்
கூடுகளில் குருவிகளின்
கும்மாளம்.



# "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல - 03

- இரா.தவராசா -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | |
| 5 | | 6 | | | |
| | 7 | | 8 | | |
| 9 | | | | | |
| | | 10 | | | 11 |
| 12 | | | 13 | | |

**இடமிருந்து வலம்**

01. அப்பாவின் தங்கை, மாமாவின் மனைவி.
03. ஜீவராசிகளின் உணர்வுகளில் இதுவும் ஒன்று.
05. நீலவான் கடலில் நீந்துகின்ற மீன்.
07. ஆடற்கலை (குழம்பிக்கிடக்கிறது.)
09. இராமருக்கு அரசியல் அறங்களை புகட்டிய குலகுரு.
10. யாரும் பொய்பேசினால் அதைத் தெரியப்படுத்த பகிடியாக இப்படியும் சொல்வார்கள்.
12. இதுவே இதை கெடுக்கும்.
13. சிவனின் அன்பைப் பெற்ற புலவர்.

**மேலிருந்து கீழ்**

01. அம்மா... என்றால் தாயே இதுவும் அப்படித்தான்.
02. புரட்சி செய்பவனிடம் இது இருக்கக் கூடாது.
04. ஏவல் செய்யும் பெண்கள் (குழம்பிக்கிடக்கிறது.)

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/, 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.03.2011
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்" குறுக்கெழுத்துப்**
**போட்டி இல.03**
**34/1, பழைய கல்முனை வீதி,**
**கல்லடி,**
**மட்டக்களப்பு.**

06. தற்குறி கையெழுத்துப் போடத் தெரியாதவன்.
08. அடையாளம் (குழம்பிக்கிடக்கிறது.)
09. பாஷைகளில் ஒன்று.
11. நெல்லில் இதை நீக்கினால் அரிசி.

## தென்றல் குறுக்கெழுத்துப் போட்டி இல. - 02இல் வெற்றி பெற்றோர்

**-முதலாம் இடம் -**

திருமதி.டி.நிசாந்தன்
ஈச்சந்தீவு, கன்னன்குடா.
பல.நோ.கூ.சங்கம்,
வவுணதீவு

**-இரண்டாம் இடம் -**

ஜெ.விதுர்ஷனா
86/39, டானியல் வீதி,
திமிலைதீவு, மட்டக்களப்பு.

**-மூன்றாம் இடம் -**

ரி.கங்காதரன்
மண்டூர்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 01 இற்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வ | 2 த | 3 ந் | தி | | 4 த |
| 5 ச | ங் | கு | | 6 க | ரு |
| 7 தி | க | தி | | ல | |
| | ம் | | 8 பூ | ச | 9 ம் |
| 10 உ | | 11 சி | ங் | ம் | க |
| 12 ரு | ள் | ரி | கா | | சு |


பாஸ்போட், அடையாள அட்டை,
சாரதி அனுமதிப்பத்திரம்,
விசாபுகைப்படங்களை 5 நிமிடத்தில்
பெற்றுக்கொள்ளவும், திருமண மற்றும்
வைபவங்களுக்குமான
புகைப்படப் பிடிப்பிற்கும் மட்டுநகரில்
தலைசிறந்த ஒரே இடம்

ஜனா ஸ்ரூடியோ
JANA STUDIO
Baily Road, Batticaloa.
Tel 0777-415035
071-3454567



AD/0030

# படமும் - பதிவும்
# விசுவரசமும் விபூதி வினோதமும்!

-ரவிப்ரியா-



நவம்பர் 4. கௌரி விரதம் முடிந்து, பெரிய கல்லாறு சின்னத்துரை வீதியில் உள்ள தனது இல்லம் நோக்கி வருகிறார் திருமதி. சுதாமதி புஸ்பகுமாரன்.

வரும் போதே வீட்டில் வாசம் வருவதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர். 25வருட தீவிர சாயிபக்தையான அவருக்கு மெய் சிலிர்த்தது.

பூஜை அறையினை பூரண பக்தியுடன் திறந்தார். அற்புத வாசனையுடன், வெண்ணிற புகை மண்டலமாக காட்சி தருகிறது சுவாமி அறை.

பகவானின் அருள் என்ற நிறைவோடு சாயி படத்தை நோக்கினார். அப்படத்தின் மேலே வெண்ணிற விபூதிப்படிவை அவதானித்து மெய் சிலிர்த்து நின்றார்.

அவ் விபூதிப் படிவானது நாளும் அதிகரித்து, பிள்ளையார், லிங்கம், சீரடி, திருக்கரம், ஆகியவற்றிலும் பரவுவதை பாபாவின் வினோதத்தை வியந்து அவர் அருளை வெளிப் படுத்தி மகிழ்ந்தார்.

விபூதிப் படிவானது தொடர்ந்தது. முருகன், லெட்சுமி, காளி படங்களில் மட்டுமல்லாது, பக்தர்கள் சாமி அறையில் கொண்டுபோய் வைக்கும் படங்களிலும் படிவு உருவாகியது.

விபூதிப்படிவானது படங்களை முற்றுகையிடுமளவு தினமும் படர்ந்து, படங்களின் கீழ் படிந்த வண்ணம் ஒரு மாதமாக தொடர்வது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி யுள்ளது.

இதனால் பக்தர்கள் தினமும் உள்ளூர், வெளியூர் என குவிந்த வண்ணம் இருக்கின்றனர். விபூதியை வீடுகளுக்கு எடுத்துச்செல்வதிலும்

அக்கறையாக இருக்கின்றனர்.

மத பேதம், இனபேதம் பாராது சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களும் இவ் இல்லத்திற்கு வருகை தந்த வண்ணம் இருக்கின்றனர்.

வருவோர் அனைவரும் பய பக்தியுடன் பார்வையிடுவது அங்கு பத்தி பரவசத்தை ஏற்படுத்தி வருகிறது.

விபூதிப் படிவானது ஒரு மாதத்தை தொட்டுவிட்ட நிலையில் அங்கு மண்டபத்தில் இருந்த சாயிபடங்களிலும் விபூதிப் பூக்கள் மலரத் தொடங்கியிருப்பது, பாபாவின் அன்பின் அடையாளத்தை நிரூபிப்ப தாக அமைகிறது.

சாயிபாபா பக்தர்களுக்கு விரும்பி வரவழைத்துக் கொடுப்பது விபூதியே! அன்று நாயன்மார்கள் செய்ததாக கூறப்படும் விடயங்களை ஒத்ததாக பாபாவின் அருட்கடாட்சம் இருக்கின்றது.அவரின் அரும்கொடையான இந்த விபூதிப்படிவு அனைவருக்கும் அருள் பாலிப்பதாக!

# தென்றலின் பார்வையில்



மட்டக்களப்பு கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் மாணவிகளின் காவடி ஆட்ட நிகழ்வைப் படத்தில் காணலாம்



ஆரையம்பதியில்......
அழகிய உஉ கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய
வேண்டிய ஒரே இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி

**அபிராமி ஜீவல்ஸ்**





பிரதான வீதி
ஆரையம்பதி - 02

தொ.பே : 065 - 3644944
077 - 6506329

AD/0008

அம்மன் துணை

**லக்ஷனா**

**கொம்பியூட்டர் சீல்**

*Pre - Ink (Five Colour)*



*Polymer Stamp*

ஒரு மணித்தியாலத்தில்
தரமாக செய்து தரப்படும்.

வெயிலி வீதி. அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே : 065 36 470 57, 077 69 155 74.
E-mail -ladshana@gmail.com

AD/0024

மட்டு நகரில்......
அழகிய 22 கரட் தங்க
நகைகளை உத்தரவாதத்துடன்
செய்து
பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி

**ரெட்ணம் ஜுவலரி**

இல.09, முனைவீதி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல.
0652223410 :. 0771128015



AD/0031

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

- ஆ.மு.சி.வேலழகன்-

**கவிதை என்றால் என்ன?**

கவிதை என்பது

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. அடி
5. தொடை

என்ற பொருள்களைக் கற்றுணர்ந்து அவற்றைக் கொண்டு (6) தளையிடுவது. அதாவது கட்டுவதனால் தமிழில் ஒரு வடிவமே கவிதை எனப்படும்.

**இதனைக் கற்பதனாலும், கற்று கவிதையை கட்டுவதனாலுமுள்ள பயன்பாடுகள் என்ன?**

இதன் பயன்பாடுகள்:-

| | | |
|---|---|---|
| 1. நகை | 4. வியப்பு | 7. கோபம் |
| 2. அழுகை | 5. பயம் | 8. மகிழ்ச்சி |
| 3. துன்பம் | 6. பெருமிதம் | 9. சாந்தம். |

ஆகிய நவரசங்களை உரைநடைமூலம் பக்கம் பக்கமாக எழுதி விளங்க வைப்பதற்குப் பதிலாக ஓசை நயத்தோடு உவமை,உருவகம்,சந்தம் உள்ளிட மனித உள்ளத்தில் பதியும்படி அழகாகவும்,சுருக்கமாகவும் கவிதைமூலம் சொல்லி விளங்கவைக்கலாம்.

**இதற்கு உதாரணமாக சில கவிதைகளை சொல்ல முடியுமா?**

ஆம். அனேகருக்கு அறிமுகமான சில சினிமாப் பாடல்கள் இதோ

பூமியிலே மாரியெல்லாம்
சூரியனாலே - பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும்
மாரியினாலே

சேமமுற நாள்முழுவதும்
உழைப்பதனாலே - இந்த
தேச மெல்லாம் செழிக்குது பார்
நம்ம கையாலே!

தரையைப் பார்த்துக்
குனிந்து நிற்குது கதிரு! - தன்
கொறையை யெண்ணி
மேலே பார்க்குது பதரு!
அறிவு உள்ளது அடங்கிக்
கெடக்குது வீட்டில்
ஆகாத சிலது ஆர்ப்பாட்டம்
செய்யிது வெளியில்! இதனால
மனிதனை மனிதன்
சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே - இது
மாறுவதெப்போ
தீருவதெப்போ நம்ம கவலே!

### எழுத்து என்றால் என்ன?

எழுத்தென்பது தமிழில் உள்ள எழுத்துக்களான:-

1. உயிர் எழுத்துக்கள் - 12
2. மெய் எழுத்துக்கள் - 18
3. ஆய்த எழுத்து - 01
4. உயிர் மெய் எழுத்துக்கள் - 216

உயிர் எழுத்துக்கள்:அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ
மெய் எழுத்துக்கள்: க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன்
உயிர் மெய் எழுத்துக்கள்: க,கா,கி,கீ,கு,கூ,கெ,கே,கை,கொ,கோ,கௌ ஆகிய ஏனைய எழுத்துக்களுமாகும்.
ஆய்த எழுத்து:- ஃ இது நுட்பமானது உயிருமாகாது. மெய்யுமாகாது. தனி நிற்றலின் நிலை எனப்படும்.

### எழுத்துக்களின் மாத்திரைகள்

எழுத்துக்கள் ஒலிக்கும் நேரம் மாத்திரை எனப்படும். இயல்பாக கண்ணிமைக்கும் நேரமும்,கைநொடிக்கும் நேரமும் மாத்திரை எனப்படும்.

உயிர் எழுத்துக்கள் குறில், நெடில் என இரு வகைப்படும்.

குறில்:- அ,இ,உ,எ,ஒ இவ் ஐந்து எழுத்துக்களும் குறுகிய ஓசை உடையனவாகும்.

நெடில்:- ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ இந்த ஏழு எழுத்துக்களும் நீண்ட ஓசை உடையனவாகும்.

**மெய் எழுத்துக்கள்**

1. வல்லினம் - க்,ச்,ட்,த்,ப்,ற்
2. மெல்லினம் - ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
3. இடையினம் - ய்,ர்,ல்,வ்,ழ்,ள்

**அசை என்றால் என்ன?**

அசை

நேர்அசை

1. குறில் தனித்து வருவது - அ
2. குறில் ஒற்றெடுத்து வருவது- அல்
3. நெடில் தனித்து வருவது - மா
4. நெடில் ஒற்றெடுத்து வருவது - மான்

நிரைஅசை

1. இரு குறில்கள் இணைந்து வருவது - பல
2. இணைக்குறில் ஒற்றெடுத்து வருவது - பலம்
3. குறில்,நெடில் வருவது - வரா
4. குறில்,நெடில் ஒற்றெடுத்து வருவது - வரால்

உதாரணம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ / | ல்லா / | விளக் / | கும் | விளக் /கல் | / ல | சான் | /றோர்க் / | குப் | |
| நேர் | நேர் | நிரை | நேர் | நிரை | நேர் | நேர் | நேர் | நேர் | நேர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொய் / | யா | விளக் / | கே | விளக் / | கு |
| நேர் | நேர் | நிரை | நேர் | நிரை | நேர் |

* நேரசைக்கு " வா,ழி,நம்,தாய்," என்பதை நினைவில் வைக்கலாமாம்.

* நிரையிக்கு " அணி, குழை, அலங்,கலாள்." என்பதை நினைவில் வைக்கலாமாம்.

**அசை பிரிக்கும் போது கவனிக்க வேண்டியவை:-**

1. அசைக்குப் பொருள் தேடல் ஆகாது. அசையில் பொருள் இராது.
2. ஒருசீரில் உள்ள எழுத்துக்களையே அசையாகப்பிரித்தல் வேண்டும். மற்றச்சீரில் உள்ள எழுத்துக்களைச் சேர்த்துப் பிரித்தல் சரியல்ல.
3. புணர்ச்சி சேர்த்தே அசை பிரிக்க வேண்டும். சந்திபிரித்து அசை பிரிக்கக் கூடாது
4. இசையில் இருக்கும் மெய்யெழுத்து அசையைப் பிரித்துக்காட்டும்.
5. மெய்யெழுத்து கணக்கிடப்படுவதில்லை. ஆய்த எழுத்தும் மெய்யெழுத்துப் போலே கருதப்படல் வேண்டும்.

6. இரண்டெழுத்துக்களுடன் மெய்யெழுத்துக்கள் சேர்ந்திருந்தாலும், அவை நிரையசைகளே.

7. ஐ,ஔ என்னும் உயிரெழுத்துக்களும் இவ்வுயிர்கள் ஏறிய மெய்யெழுத்துக்களும்
நெடில்களே.

8. ரை என்ற எழுத்து சீருக்கு இடையில் வந்தால் ரகாம் போலக்கருதி அலகிடல் வேண்டும். ஐகாரம் சீரின் இடையிலும், கடையி நிற்பின் குறிலின் பயனுடையதாகுமாம்.

(உ-ம்) காயரைத்து - கா /ய ரை த் / து / (நேர் / நிரை / நேர்)

செயற்பாடு : I

பின்வரும் செய்யுள்களை அவதானித்து அசைபிரித்து அவை என்ன அசை என்பதை குறிப்பிடுவோம்.

அ. முன்னம்நின் அன்னை முலையூட்டி
மையிட்டு மூக்குச்சிந்தி
கன்னமும் கிள்ளிய நாளல்ல
வேஉன்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்சையும் போலிரு
பெண் கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன் நானோசெந்
தூரில் இருப்பவனே.

முன் / னம் / நின் / அன் / னை / முலை /யூட் / டி
நேர்/ நேர் / நேர் / நேர் / நேர் / நிரை / நேர் /நேர்

மை / யிட் /டு / மூக் / குச் / சிந் / தி /
நேர்/ நேர் /நேர் / நேர் / நேர் /நேர் /நேர்

கன் / ன / மும் /கிள் / ளிய / நா / ளல் / ல
நேர் / நேர் / நேர் / நேர் / நிரை / நேர் / நேர் / நேர்

வே / உன் / னைக் /காப் / பதற் / கே
நேர் / நேர் / நேர் / நேர் / நிரை / நேர்

அன் / ன / மும் / மஞ் / சை / யும் /போ / லிரு
நேர்/ நேர் / நேர் / நேர் / நேர் / நேர் /நேர் /நிரை

பெண் / கொண் /ட / ஆண் / பிள் / ளை / நீ
நேர் / நேர் /நேர் / நேர் / நேர் / நேர் /நேர்

இன் / ன / மும் / சின் / ன / வன் / நா / னோ / செந்
நேர்/ நேர் / நேர் / நேர் / நேர் /நேர் / நேர் / நேர் / நேர்

தூ / ரில் / இ / ருப் / ப / வனே
நேர் / நேர் / நேர் / நேர் / நேர் / நிரை.

ஆ.முந் / தித் / தவங் / கிடந் / து / முந் / நூறு / நாட் /சுமந் / து
நேர்/ நேர் / நிரை /நிரை / நேர் / நேர் / நேர் /நேர் / நிரை /நேர்

அந் / தி / பக / லாச் / சிவ /னை / ஆ /தரித் /துத் / தொந் /தி
நேர்/ நேர்/நிரை /நேர் /நிரை /நேர் /நேர் /நேர் /நிரை/ நேர் /நேர்

சரி / யச் / சுமந் /து / பெற் / ற / தா /யார் /தமக் / கே
நிரை /நேர் / நிரை /நேர் / நேர் /நேர் /நேர் / நேர் / நிரை / நேர்

எரி / யத் / தழல் / மூட் / டு / வேன்.
நிரை/ நேர் / நிரை / நேர் / நேர் / நேர்

இ. ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகெண் டோட
வழிதனிலே கடன்காரன் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்ல
தள்ளவொண்ணா விருந்து வரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தன் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களுமோ தட்சணையைக் கொடுவென் ரே!

செயற்பாடு - II

பூக்கள் என்ற தலைப்பில் ஒரு நான்கு வரிப்பாட்டு எழுதி மிக ஒரு இலகுவான சந்தத்தில் அது அமையட்டுமாம்.எடுத்துக்காட்டாக.

பூவே புதுப் பூவே
புதிய மணம் தந்தாயே
மேவும் இள வெயிலில்
விரிந் தழகாய் நின்றாயே!

இதில் எத்தனை சீர்கள் வந்துள்ளன? ஒவ்வொரு சீரிலும் வந்துள்ள அசைகளைப் பிரித்துக்காட்டட்டுமாம். அவை நேரசையா, நிரையசையா என்பதையும் விளக்கட்டுமாம்.

செயற்பாடு - III

**சீர்கள்**

1. ஓரசைச்சீர்
2. ஈரசைச்சீர்
3. மூவகைச்சீர்
4. நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

ஓரசைச்சீரை அசைச்சீர் என்பாராம். அசை நேரரை, நிரையசையென இருவகைப்படுதலாம். ஓரசைச்சீரும் இரு வகைப்படுமாம்.

1. நேரசை அசைச்சீர்
2. நிரையசைஅசைச்சீர்

ஓரசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலே வருமாம்

நேரசைக்கு வாய்பாடு - நாள் - நேர்

நிரையசைக்கு வாய்பாடு - மலர் - நிரை

**ஈரசைச்சீர்**

| | | |
|---|---|---|
| நேர் நேர் | - | தேமா என்றும் |
| நிரை நேர் | - | புளிமா என்றும் |
| நேர் நிரை | - | கூவிளம் என்றும் |

நிரை நிரை - கருவிளம் என்றும் பெயர்களை வைத்தனரா? நம் முன்னோர்களான தமிழர்கள். இந்த நான்கையும் மேலும் ஒருங்கே காண்போம்.

| | | |
|---|---|---|
| நேர் + நேர் | - | தேமா |
| நிரை + நேர் | - | புளிமா |
| நேர் + நிரை | - | கூவிளம் |
| நிரை + நிரை | - | கருவிளம் |

இந்த நான்கு வாய்பாடுகளையும் மனப்பாடம் செய்ய வேண்டுமா?. ஆம்! உறக்கத்தில் தட்டி எழுப்பிக்கேட்டாலும் நேர் + நேர் = தேமா என்றும் ,நிரை + நேர்- புளிமா என்றும் . நேர் + நிரை-கூவிளம் என்றும்

நிரை + நிரை-கருவிளம் என்றும் சொல்லத் தெரிய வேண்டுமாம். திரும்பத் திரும்பச் சொல்வதற்கு காரணம். இவற்றைப் ஒரு முறை படிக்கும் போது மனதில் வாய்பாடு படிய வேண்டும் என்பதற்காகவேயாம். இதோ செய்யுங்கள்.

* நன்றி **"பாவலர் ஆகலாம்"** திமிலைத்துமிலன் சேரின். **"கவிஞராக"** அ.கி.பரந்தாமன் சேரின்

**-தொடரும்-**



# புகைத்தலினால் புற்றுநோய்

**1. சுவாசப்பை புற்றுநோய் என்பதென்ன?**

சுவாசத் தொகுதியில் ஏற்படும் புற்றுநோய்கள் இவ்வகையைச் சார்ந்தன. இவற்றுள் மூச்சுக்குழல், மூச்சுக்குழல் சுவர்கள், சுவாசப்பைகள் ஆகியனவற்றில் ஏற்படும் புற்றுநோய் சிலவாகும்.

**2. சுவாசப்பை புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகிறது?**

உடலுக்குள் செல்லும் புற்றுநோய் பிறப்பாக்கிகள் இந்நோய்க்கு மூலகாரணமாகின்றன. புகைப்பிடித்தல், சுற்றுப்புறம் மாசடை தல், அசுத்தம், ஆகியன இவ்வாறான புற்றுநோய் பிறப்பாக்கிகள் உடலுக்குள் செல்லும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. நாம் புகை பிடிக்கும் பொழுது அங்குள்ள புகையிலை $600^0$ முதல் $700^0$ சென்ரி கிரேட் வரை உயர்ந்த வெப்பநிலையில் கூடி, அதிலிருந்து வரும் புகைச்சுருள் களைச் சுவாசிக்கிறோம். எனவே புகைப்பிடிப்போரில் சுவாசத்தொகுதியின் மேல் பாகங்களுடன் புற்றுநோய் பிறப்பாக்கிகள் மோதும் சந்தர்ப்பம் அதிகமாகும். இவ்வாறான ஆட்கள் இறுதியில், இருதயநோய்க்கு அல்லது சுவாசப்பை புற்றுநோய்க்கு உட்பட நேரிடுகிறது.

**3. புற்றுநோய் பிறப்பாக்கிகள் என்பது என்ன?**

நமது புழக்கத்தில் உள்ள அளவற்ற இரசாயன பொருட்களில் சிலவற்றிற்கு நமது உடலின் சாதாரண கலமொன்றை அசாதாரண கலமாகவோ அல்லது புற்றுநோய் கலமாகவோ மாற்றுவதற்கு முடியும். மருத்துவது றையில் இவ்வித தன்மையைக் காட்டும் இரசாயனப்பொருட்கள் புற்றுநோய் பிறப்பாக்கிகள் அல்லது புற்றுநோய் ஆக்கிகள் எனக்கூறப்படுகின்றன. எரியும் புகைப்பொருட்களில் உள்ளடங்கும் பல புற்றுநோய் பிறப்பாக்கிகளில் பிரதான இடத்தை வகிப்பது 3 : 4 **"பொன்சோபயரின்"** என்னும் இரசாயனப் பொருட்களாகும். இவையே சுவாசப் புற்றுநோய்க்குக் காரணமானது ஆகும்.

**4. புகைப்பிடிக்கும் வயது எல்லையும், நாளொன்றில் பிடிக்கும் புகைப்பிடி பொருட்களின் அளவும் சுவாசபுற்று நோய்க்குக் காரணமாகின்றனவா?**

ஆம். ஒருவர் புகைபிடிப்பதற்கு ஆரம்பிக்கும் வயதும், நாள் ஒன்றில் அவர் உபயோகிக்கும் புகைப் பொருட்களின் அளவும் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

இது அண்மைக்கால ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. ஆயினும் கவலைப் பட அவசியமில்லை. நீங்கள் புகை பிடிப்பவராக இருந்து உங்களுக்கு இது வரை நீங்கள் புகைப்பிடித்த காலத் தாலும் புகைப்பிடித்த பொருட்களின் அளவினாலும் எதுவித பிரச்சினையும் உங்களுக்கு ஏற்படப் போவதில்லை. இதனால் சுவாசப்புற்று ஏற்படும் தன்மையிருந்திருப்பின் அது இல்லாது போகிறது. சுருங்கக் கூறுவதானால், புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கை விட்ட சில மாதங்களில் ஆரோக்கிய மான புதுமனிதராகவும் மாறி விடுகிறீர்கள்.

**5. எனக்கு புகைபிடிக்கும் பழக்கம் இல்லாத போதும், நான் புகைப்பிடித்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் நெருக்கமாக இருந்தால் எனக்கு சுவாசப்புற்று ஏற்பட முடியுமா?**

இக்கேள்விக்கான பதில் சிலவேளை உங்களை புதுமையடையச் செய்யலாம். ஆயினும், உண்மை. நீங்கள் புகைபிடிக்காத போதிலும், உங்கள் அருகில் உள்ளவர் பிடிக்கும் புகைப்பொருளில் இருந்துவரும் புகையை நீங்கள் சுவாசிப்பதன் மூலம் தாக்கம் ஏற்படலாம். இக்காரணத்தினா லேயே இன்று பல முன்னேறிய நாடுக ளில் புகைபிடிக்காதவர்களின் பாதுகாப் புக்கான அமைப்புக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

எனினும், நாம் யாவரும் பயணஞ் செய்யும் பஸ்ஸில் யன்னல் கண்ணாடிகள் மூடியிருக்க, புகைப்பிடிக் கப்படும் அளவு துரதிஷ்டவசமானதே. நீங்களும் நானும் புகைபிடிக்காத போதும் இவற்றைச் சுவாசிக்க நேரிடுகிறது. அதாவது சுவாச புற்று ஏற்படும் வாய்ப்புக்கு உட்படுகின்றோம்.

**6. அதிகம் சுவாசப்புற்று ஆண்களுக்குத்தான் ஏற்படுகிறதா?**

இல்லை. இக்கூற்றில் எதுவித விஞ்ஞான ரீதியான உண்மையும் இல்லை. ஆனாலும் அதிகமாக புகைபிடிப்போர் ஆண்கள் என்பதனாலும், குறிப்பாக வளர்முக நாடுகளில் அதிகம் புகைபிடிப்புக்கு அடிமையாகியுள்ள வர்கள் ஆண்கள் என்பதாலும் ஆண்களுக்கு இந்நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாய் உள்ளன. எனினும், வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆண்களுக்குப் போலவே பெண்க ளுக்கும் சமமாக இந்நோய் உள்ளது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**7. புற்றுநோயைச் சுகப்படுத்த முடியுமா?**

இக்கேள்விக்கு ஒரே வார்த்தை யில் பதில் கூறிவிட முடியாது. நோயைக் கண்டு பிடிப்பதில் கஷ்டங்கள் உள்ளன. நோயைக் கண்டுபிடிக்கும் பொழுது நோய் தீவிரமடைந்திருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம். இக்காரணங் களால் சுவாச புற்றுநோயைச் சுகப்படுத் துவது கஷ்டமாகிறது. உதாரணமாக அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் கூடச் சுவாசப் புற்றுநோயாளர்களில் 9% மானோரே சுகம்பெற வாய்ப்புப் பெறுகின்றனர்.

**8. சுவாசப் புற்றுக்குச் செய்யப்படும் சிகிச்சை முறைகள்**

ஏனைய புற்றுநோய்களுக்குப்

போலவே சுவாச புற்றுக்கும் மூன்று வகைச் சிகிச்சை முறைகள் உள்ளன.

1. சத்திரசிகிச்சை
2. கதிர் முறை சிகிச்சை
3. மருந்துகளால் அளிக்கும் சிகிச்சை.

**9. சுவாசப்புற்றைத் தெரிந்து கொள்வது எப்படி?**

புகை பிடிப்போரிடம் சரளமாக்க் காணப்படும் இருமல், சிலவேளைகளில் இருமும்போது இரத்தம் வெளியேறுதல் ஆகியன சுவாச புற்றுக்கான அடிப்படை அடையாளங்கள் ஆகும்.

**10. புகை பிடிப்பதால் சுவாசபுற்று மாத்திரமா ஏற்படமுடியும்?**

இல்லை. புகை பிடிப்பதால் முக்கியமாக இதயநோய்கள், நுரையீரல் புற்று உட்படச் சுவாசத்தொகுதி தொடர்பான வேறு நோய்களும் ஏற்படலாம். இவற்றுக்கும் மேலாக, இரத்த ஓட்டத்தைத் தடுக்கும் இரத்தக் குழாய்களிலான நோய்கள் ஏற்படலாம்.

- புகை பிடிக்க வேண்டாம்.
- நீங்கள் பிடிப்பதானால், அப்பழக்கத்தை இன்றே கைவிடுங்கள்.
- இவ்வருடம் முடிவதற்கு முன், குறைந்தது இன்னும் 10 பேரையேனும் இப்பழக்கத்தில் இருந்து விடுவிப்பதற்குத் தீர்மானம் எடுக்க இலங்கைப் புற்றுநோய்ச் சங்கங்கள் உங்களை அறிவுறுத்துகிறது.

இவ்வுதவியைத் தேசத்துக்காக உங்களாலும், என்னாலும் செய்யமுடியுமானால், எதிர்வரும் தசாப்த ஆரம்பத்தில் சுவாசப்பை புற்றுநோய் அரிதான நோயாகிவிடுவது நிச்சயம்.

(நீங்கள் இன்று புகைபிடிப்பீர்களானால், எதிர்காலத்தில் எங்களால் உங்களுக்காக அனுதாபப்பட மட்டுமே முடியும்)

**உங்களுக்குத் தெரியுமா?**


- புகைபிடிக்கும் ஒவ்வொரு முறையுடனும் இதயதுடிப்பு அதிகரிக்கிறது என்றும்,
- புகைபிடிக்கும் உங்களது இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படலாம் என்றும்,
- புகைபிடிப்பதால் வாழும் காலம் குறையலாம் என்றும்
- புகைபிடிக்கும் உங்களது சுவாசத் தொகுதியில் நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு என்றும்,
- நீங்கள் புகைப்பவராயின் நீங்கள் வெளிவிடும் புகைச்சுருள்களினால் உங்கள் குடும்பத்தில் உள்ளோருக்கும் பாதிப்புகள் ஏற்படலாம் என்றும்,
- புகைபிடிக்காத நீங்களும் புகைபிடிக்கும் ஒருவரின் அருகில் இருப்பதால் மேற்கூறிய நிலைமைகளுக்கு உட்படலாம்.


நன்றி :- அ.செல்வேந்திரன்
மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தலைவர்.


# புலமைப் பரிசில் பரீட்சை (2010) இல் சித்திபெற்றோர் விபரம்

## மட்/செங்கலடி மத்திய கல்லூரி



பிறேம்குமார்
சாருகேஸன்
புள்ளிகள் - 178


மனோகரன்
மனோஜினி
புள்ளிகள் - 167


ஜெகநாதன்
சருஜன்
புள்ளிகள் - 163



ராஜ்பாபு
ஜதுஷன்
புள்ளிகள் - 161

## மட்/செங்கலடி மத்திய கல்லூரி


சுந்தரமூர்த்தி
குகதாஸ்
புள்ளிகள் - 161



நேசராஜன்
டெனிஸ் டில்ஷான்
புள்ளிகள் - 159


ரவீந்திரன்
நிதுஷன்
புள்ளிகள் - 157



சசிகுமார்
ரக்ஷனா
புள்ளிகள் -156

## மட்/செங்கலடி மத்திய கல்லூரி


பாக்கியராசா
துவாகரணி
புள்ளிகள் - 155



கீர்த்தி
டனுஷன்
புள்ளிகள் - 152


ஜெயச்சந்திரன்
சதுஜன்
புள்ளிகள் - 150



முரளிதரன்
டிரேஸ்
புள்ளிகள் - 149

# "தென்றல்" இவர்களை வாழ்த்துகிறது!

## மட்/செங்கலடி மத்திய கல்லூரி



குணசேகரம்
கிருத்திகன்
புள்ளிகள் - 147



ராஜ்குமார்
பவத்திரி
புள்ளிகள் - 142

## மட்/வந்தாறுமூலை விஷ்னு மகாவித்தியாலயம்



யோகநாதன்
ஸஞ்சிகா
புள்ளிகள் - 174



புவனேசச்சந்திரன்
கவித்தா
புள்ளிகள் - 169


## மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயம்



லிங்கராஜ்
லிவியராஜ்
புள்ளிகள் - 165



லெனாட் பிரியங்கன்
ரவிராஜ்
புள்ளிகள் - 160




சபாரெத்தினம்
சியானுராஜன்
புள்ளிகள் - 157




வேலுப்பிள்ளை
அஜய்
புள்ளிகள் -154

## மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயம்




றஞ்சன்
வேணுஜன்
புள்ளிகள் - 154



வினாயகம்
விஜிதன்
புள்ளிகள் - 153






எலக்ஷிகா
சண்முகம்
புள்ளிகள் - 153




தயாநிதி
தர்ஷனா
புள்ளிகள் - 142

# "தென்றல்" இவர்களை வாழ்த்துகிறது!

| மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயம் | மட்/மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம் | மட்/பெரியகல்லாறு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை | மட்/பெரியகல்லாறு புனித அருளானந்தர் வித்தியாலயம் |
|---|---|---|---|
|  |  |  |  |
| கிருபைராஜா யனுஷன் புள்ளிகள் - 142 | மாணிக்கவாசகம் டனுயா புள்ளிகள் - 146 | குவேந்திரராஜா கீபிகா புள்ளிகள் - 164 | இந்திரஜித்ஸ்ரீபன் றொணி ஜெபர்சன் புள்ளிகள் - 144 |

## மட்/தேத்தாத்தீவு மகாவித்தியாலயம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| நவராசா ஜிம்சிகா புள்ளிகள் - 145 | வீரசிங்கம் தினேஸ்காந் புள்ளிகள் - 143 | ஜோதிகலாநந்தன் ஜனுஜா புள்ளிகள் - 149 | சிவராசா பிரம்மினா புள்ளிகள் -149 |

| மட்/தேத்தாத்தீவு மகாவித்தியாலயம் | மட்/பெரிய கல்லாறு மெதடிஸ்த தமிழ் பெண்கள் பாடசாலை | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| சந்திரசேகரன் அலோஜினி புள்ளிகள் - 146 | எல்மோ ஷெரோமினி புள்ளிகள் - 176 | குகதாஸ் கபிசரன் புள்ளிகள் - 168 | மனோகரன் கியூமிகா புள்ளிகள் - 163 |


# "தென்றல்" இவர்களை வாழ்த்துகிறது!

## மட்/பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் மகா வித்தியாலயம்


சசிகுமார்
கீர்த்தனன்
புள்ளிகள் - 167


சங்கரப்பிள்ளை
ஜோதிகா
புள்ளிகள் - 164


ரஞ்சன்
கீதரம்மியா
புள்ளிகள் - 161


ஜெயக்காந்தன்
ஜெகவந்தன்
புள்ளிகள் - 160

## மட்/பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் மகா வித்தியாலயம்



யோகராஜ்
வினோஜன்
புள்ளிகள் - 160


ஸ்ரீசங்கர்
விபோசிகன்
புள்ளிகள் - 160



நாஜேந்திரராஜ்
மிதுர்ஷனா
புள்ளிகள் - 158


யோகராஜ்
ஜினோஜ்
புள்ளிகள் -154

## மட்/பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் மகா வித்தியாலயம்


உதயகிரி
குபேதினி
புள்ளிகள் -153


சுதாகர்
துலக்ஷி
புள்ளிகள் - 149


சிவானந்தன்
சதோஷ்
புள்ளிகள் - 147


சதாதேவன்
தர்ஷிகா
புள்ளிகள் - 146

# க.பொ.த (சா/தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வரலாறு பாடத்துக்கான மாதிரி வினாத்தாள் -1

## மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

1.) பாளி மொழியில் இலங்கைத்தீவின் அரசவம்சாவழியை முதன்முதலில் விபரிக்கின்ற நூல்.

(i) மகாவம்சம் (ii) சூளவம்சம் (iii) மகாபாரதம் (iv) தீபவம்சம்

(A) மிகிந்தலை (B) கடலதெனிய (C) தோணிகல
(D) பதுளை (E) தம்புள்ளை (F) சிதுல்பல்வ
(G) கல்பொத்த

2.) ஆரியக் குடியினரின் வருகையின் போது அவர்கள் சந்தித்த இயக்க இன ராணியின் பெயர்?

(i) குவேனி (ii) மதுராபுரி இளவரசி
(iii) மித்தா இளவரசி (iv) பத்தகச்சானா

3.) பின்வரும் விடயங்களை சரியான விடயங்களுடன் பொருத்துக.

(A) இரு மலைச்சுவடுகளை இணைத்து அமைக்கப்பட்டது. X.) அலைதாங்கி
(B) மேலதிகமான நீரினை வெளியேற்றுதல் Y.) கலிங்கல் தொட்டி
(C) குளக்கட்டினை பாதுகாத்தல் Q.) குளக்கட்டு
(D) குளத்தின் அமுக்கத்தை கட்டுப்படுத்தல் Z.) சுருங்கை

(i) Q,Z,X,Y (ii) Q,Z,Y,X (iii) Q,X,Y,Z (iv) Y,X,Q,Z

**கீழே தரப்பட்ட கூற்றுக்களைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

(i) உண்மை-உண்மை (ii) பொய்-பொய்
(iii) உண்மை-பொய் (iv) பொய்-உண்மை

| கூற்று 1 | கூற்று 2 |
|---|---|
| 4.) வடஇந்தியாவில் இருந்து வருகை தந்த கூட்டமே ஆரியகுழு ஆகும். (i) I (ii) II | இலங்கையின் வரலாற்று ஆதாரங்களில் தேச சஞ்சாரம் செய்தோர் பாகியர் ஹயுங் சாய் போன்றோர் அறிக்கையும் அடங்கும் (i) III (ii) IV |
| 5.) ஆரிய சமூகத்தில் அரசியல் முறையில் தலைவன் அரசன். (i) I (ii) II | சாதிமுறையில் மக்களின் அடிப்படைத் தொழில்கள் இடம்பெறும். (i) III (ii) IV |

| | |
|---|---|
| 6.)நகர நிர்வாக நடவடிக்கைகளை மேற் கொள்ள நகர குத்திகன் என்ற அலுவலர் காணப்பட்டார்.<br>(i) I (ii) II | அரசனின் படைத் தலைவன் தோவரிக்கா ஆவான்.<br>(i) III (ii) IV |
| 7.)அநுராதபுர யுகத்தில் சந்திரவட்டக் கல்லிலி ருந்து எருது வடிவம் நீக்கப்பட்டது.<br>(i) I (ii) II | தேவநம்பியதீசன் பெரும் எண்ணக்கையிலான பிக்குகள் இருப்பிடம் வழங்கும் பொருட்டு 7 தளங்கள் கொண்ட லோகமகாபாய கட்டிடத்தை நிர்மானித்தான்.<br>(i) III (ii) IV |

8.) பூஜாவலிய, மயூரசந்தோச, காவிய சேகர போன்ற நூல்களுக்குரிய மன்னர்கள் முறையே

(i) 1ம்பராக்கிரமபாகு, 2ம்புவனேகபாகு, 6ம்பராக்கிரமபாகு

(ii) 4ம் பராக்கிரமபாகு, 5ம்புவனேகபாகு, 6ம்பராக்கிரமபாகு

(iii) 2ம்பராக்கிரமபாகு, 5ம்புவனேகபாகு, 6ம்பராக்கிரமபாகு

(iv) 6ம்பராக்கிரமபாகு, 5ம்புவனேகபாகு, 2ம்பராக்கிரமபாகு

9.) 1312ல் கண்டியில் அஸ்கிரிய பீடத்தினை அமைத்தவன்.

(i) 2ம்பராக்கிரமபாகு (ii) 2ம்புவனேகபாகு

(iii) 3ம்பராக்கிரமபாகு (iv) 4ம்பராக்கிரமபாகு

10.) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவற்றை தொடர்புபடுத்துக.

1.)2ம்பராக்கிரமபாகு A.) தொட்டகமுவ விஜியபிரிவென

2.) 2ம்புவனேகபாகு B.) வில்கமூலதேரர்

3.) 5ம்புவனேகபாகு C.) தேவி துவர விஜய பிரிவேனா

4.) 4ம்பராக்கிரமபாகு D.) தெவிதுவரவிஜய பிரிவேனா

E.) புத்திரதேரர்

(i) CDBA (ii) EDBA (iii) EBAC (iv) ECBA

11.) கம்பளைக்கு பொருத்தமான கூற்றுகள்.

(A) 1255ல் கலிங்க மாகனை விரட்டி பொலனறுவையை மீட்டல்.

(B) 2ம் சிகிரியா என அழைக்கப்பட்டமை


(C) இரு மலைகளால் சூழப்பட்ட ஓர்பள்ளத்தாக்கு பிரதேசம் ஆகும்.

(D) இலங்கை ஒரே கூடையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(E) இலங்காதிலக, கடலதெனிய, எம்பக்க தேவாலயங்கள் காணப்படுகின்றன.

(i) AC (ii) CD (iii) DE (iv) CE

**பின்வரும் இலங்கைப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக.**




12.) புதிதாக சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் மாவட்டம் குறிக்கும் எழுத்து
(i) D (ii) B
(iii) C (iv) I

13.) புராதன கால ஆய்வுகள் மூலம் பல்வேறுபட்ட பகருணங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்படும் இடங்கள் குறிக்கும் எழுத்து முறையே
(i) CB (ii) AH
(iii) HB (iv) EC

14.) இலங்கையில் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட துறைமுகம் குறிக்கும் எழுத்துக்கள் முறையே
(i) B (ii) K (iii) D (iv) C

15.) திரிசிங்களாதீஸ்வரன் என்ற பட்டப்பெயருக்குரிய மன்னனின் இராசதானி யாது?
(i) M (ii) L (iii) J (iv) E

16.) புலத்தி நகரம் என்றழைக்கப்படும் இடத்தினை குறிக்கும் எழுத்து?
(i) F (ii) G (iii) M (iv) B

17.) போர்த்துக்கேயரின் கீழைத்தேய வர்த்தக நிலையமாக விளங்கிய இடம்?
(i) பாண்டிச்சேரி (ii) கள்ளிக்கோட்டை (iii) மும்பாய் (iv) கோவா

18.) பாண்டியக் கல்வெட்டில் யாழ்ப்பாணத்தை ஆண்டதாக கூறப்படும் மன்னன்.
(i) ஆரியச்சக்கரவர்த்தி (ii) சங்கிலியன் (iii) சத்திரபானு (iv) செந்தமேன்

19.) கோட்டை இராசதானி முழுவதும் போர்த்துக்கேயர் வசமான ஆண்டு
(i) 1580 (ii) 1557 (iii) 1658 (iv) 1597

20.) சீதாவாக்கை இராசதானி எழுச்சிக்கு பிரதான காரணமாக அமைவது?
(i) றைகம பண்டார இறந்தபின் சீதாவாக்கையுடன் இணைந்தமை

(ii) மாயாதுன்னையின் திறமைகள்

(iii) பெரும் தொகையான பௌத்த மதகுருமார்களும் மக்களும் சீதாவாக்கை சென்றமை.

(iv) புனித தந்த தாது கோட்டையில் இருந்து சீதாவாக்கைக்கு கொண்டு சென்றமை.

**பின்வரும் பெயர்களை அடிப்படையாக கொண்டு கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.**

(A) கொணப்பு பண்டார (B) மஹ அஸ்தான (C) சங்கிலி மன்னன்

(D) டிக்கிரிபண்டார

(E) மாயாதுன்னை (F) ஹிவீரபராக்கிரம நரேந்திரசிங்கன்

(G) பரராஜசேகரன்

21.) மலையகத்தினை பாதுகாக்க இருதடவைகள் போர்த்துக்கேயரை விரட்டிய மன்னர்கள்

(i) AD (ii) AB (iii) BD (iv) AF

22.) மலையக இராசதானியின் இறுதி சிங்கள மன்னன்

(i) C (ii) E (iii) B (iv) F

23.) 1592ல் கனதென்ன எனும் இடத்தில் தோல்வி கண்டு விரக்தியுற்ற மன்னன்.

(i) A (ii) B (iii) D (iv) E

24.) போர்த்துக்கேயரின் நிர்வாகத்தின் போது கொழும்பு நகரம் எப்பெயரால் அழைக்கப்பட்டது.

(i) கோட்டை (ii) சென்லோரன்ஸ் நகர்

(iii) கோரளை (iv) அத்துக்கோரணை

25.) ஹ்ரீ விஜய இராஜசிங்கன் ஆட்சியின் முக்கிய பண்பாக கருதக்கூடியது.

(i) நாயக்கத்தின் முதல் மன்னன்

(ii) நாயக்க வம்சஇளவரசியை மணந்தமை


(iii) உபசம்பதச் சடங்குகளை நடத்தியமை

(iv) வெலிவிட்ட சரணங்கரதேரருக்கு அரசகுரு பதவியை வழங்கியமை

26.) 1900 ஆண்டு வடமாகாண குளங்களை புனரமைத்து நீர்ப்பாசனத் திணைக்களத்தை உருவாக்கியவர்.

(i) ஹென்றி ஆதர்பிளேக் (ii) வெஸ்ட் றிஸ்வே

(iii) ஆதர்கோடன் (iv) வில்லியம் கிறேகரி





# புத்தம்புதிய

# கம்பியூட்டர்கள்

# ரூபா. 37,500க்கு.

## சகலவிதமான கணனிக்குரிய பாகங்களையும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# IT Solution

(இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)

இல.233, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி - 065-2224857,
071-3434634 ஈ.மெயில்- itsolutionsl@yahoo.com

*Total Solution For Your Information Technology Needs*

AD/0003

உங்கள்...
எதிர்கால வீட்டுக்கான கனவை...
நனவாக்க....
இன்றே..!
ஓர்...
சேமிப்புக் கணக்கின் மூலம்
அத்திவாரம் இடுங்கள்.

HDFC BANK

நீங்கள்.....

* காணி வாங்குவதற்கு
* புதியதோர் வீட்டை அமைப்பதற்கு
* இருக்கும் வீட்டினை திருத்துவதற்கு
* குளியலறை அல்லது மலசலகூடம் அமைப்பதற்கு
* கிணறு அல்லது தண்ணீர் தாங்கி அமைப்பதற்கு
* வீட்டுத்தளபாடங்கள் வாங்குவதற்கு
* வீட்டுக்கு வர்ணம் பூசுவதற்கு
* சுற்று மதில் அமைப்பதற்கு
* மின்சாரம் பெறுவதற்கு

அரச உத்தரவாதத்துடன் கூடிய நம்பகரமான துரித சேவை

# HDFC BANK

உங்களுக்கான வீடமைப்பு வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
58 வெபிலி வீதி, அரசடி, மட்டக்களப்பு.

Tel: 065 - 2222792, 065 - 2227573
Mob: 071 - 5881804, 077 - 7142380

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.